Follow us

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 55 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (06.09.2022) ஹிஜ்ரி 1444, ச/பர் - 09 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## பிரித்தானியாவின் புதிய பிரதமர் லிஸ் டிரஸ்



பிரித்தானியாவின் புதிய பிரதமராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லிஸ் டிரஸ் (47) தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று மாலை வெளியானது.

02 பக்கம்



## விடாது மழை; 09 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

02 பக்கம்

# இலங்கை அகதிகளை திருப்பியழைக்க ஏற்பாடு!

## யுத்த காலத்தில் இந்தியாவுக்கு சென்றோர் குறித்து அரசு கவனம்



08 பக்கம்

## வெல்கம தலைமையில் புதிய கட்சி உதயம்

### கோட்டாவை மிகக் கடுமையாகச் சாடி ஆரம்ப உரை



•யோ.தர்மராஜ்

மக்கள் போராட்டத்தால் விரட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் நாட்டுக்கு வந்தமைக்கு அவரை வாழ்த்துகின்றோம். எனினும், அரசியலுக்கு வரவேண்டாம்.

02 பக்கம்

## ராஜபக்ஷக்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்

### வங்குரோத்து நிலைக்கு துணைபோனவர்களையும் விட்டுவைக்கக் கூடாது என்கிறார் சம்பிக்க எம்.பி.



•யோ.தர்மராஜ்

வீதிகளில் போராடியவர்கள் என்றும் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றார்கள் என்றும் கூறி பொது மக்களை கைதுசெய்யக்கூடாது, அவர்களுக்கு பதிலாக நாட்டை வங்குரோத்தடையச் செய்து 55 இலட்ச குடும்பங்களை வீதியில் தள்ளிய, அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் அமைச்சுகளின் அதிகாரிகளையுமே கைது செய்யவேண்டும்.

02 பக்கம்

## லிட்ரோ எரிவாயு விலை குறைந்தது




உலக சந்தையில் நிலவும் எரிவாயு விலையை கருத்திற்கொண்டு, விலைச் சூத்திரத்துக்கு அமைய, நேற்று நள்ளிரவு முதல் லிட்ரோ எரிவாயுவின் விலையை குறைப்பதற்கு அந்நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 113 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை நான்காயிரத்து 551 ரூபாவாகும்.

ஐந்து கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 45 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை ஆயிரத்து 827 ரூபாவாகும்.

மேலும், 2.3 கிலோ சமையல் எரிவாயுவின் விலை 21 ரூபாவால் விலை குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 848 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 4 பில். டொலர் நிதியுதவி இலங்கைக்கு வழங்கினோம்!

### ஐ.நா. சபையில் அறிவித்தது இந்தியா



•நமது விசேட செய்தியாளர்

இலங்கைக்கு அவசர உணவு, பொருளாதார தேவைக்காக நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் இந்தியா தெரிவித்துள்ளது.

சமாதானத்தை உருவாக்குவதற்கான ஆணைக்குழு மற்றும் சமாதானத்தை உருவாக்குவதற்கான நிதியம் தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்ட ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ருச்சிரா காம்போஜ் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

“இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் பொருளாதார நெருக்கடி..

02 பக்கம்

## உஷ்



குமார் வெல்கம ஆரம்பித்திருக்கும் புதிய அரசியல் கட்சியின் சார்பில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்கவை நியமிக்க பலதரப்பில் முயற்சிகள் எடுக்கப்படுவதாக தகவல். ஆனாலும் அதனை இப்போதைக்கு பகிரங்கப்படுத்துவதில்லையென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நாட்டை நினைத்து வெட்கப்படுகிறேன்!

### சந்திரிகா ஆதங்கம்



•யோ.தர்மராஜ்

உலகில் எந்தவொரு நாடும் இவ்வாறு வங்குரோத்து அடைந்ததே இல்லை. நாட்டில் அந்நிய செலாவணியோ, ரூபாவோ இல்லை. ஆப்பிரிக்காவை விடவும் மிக மோசமான நிலையில் இருப்பதை நினைத்து வெட்கமடைவதுடன், வேறு நாடுகளுக்குச் செல்வதற்குக்கூட வெட்கமாகவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள நவலங்கா சுதந்திரக் கட்சியின்...

02 பக்கம்

## 400 சிபெட்கோ நிலையங்கள் மூடப்படவேண்டிய சூழ்நிலை

### மீண்டும் வரிசைகள் உருவாகலாமென எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எச்சரிக்கை



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சுமார் 300 முதல் 400 வரையான எரிபொருள் நிரப்பு நிலையங்களை தற்காலிகமாக மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கூட்டுத்தாபனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கட்டண முறை காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அச்சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

02 பக்கம்

## அர்ஷ்தீப் சிங் குறித்த சர்ச்சை;

# விக்கிபீடியா மீது இந்தியா நடவடிக்கை




இந்திய கிரிக்கெட் வீரர் அர்ஷ்தீப் சிங் குறித்து சர்ச்சை கருத்து குறிப்பிட்டிருந்த விக்கிபீடியா நிறுவத்தின்மீது இந்தியா அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

அர்ஷ்தீப் சிங்கை காலிஸ்தானி என்று விமர்சித்த நிலையில், விக்கிபீடியா நிறுவனத்தின்மீது இந்திய அரசு கடும் நடவடிக்கை எடுத்துள்ளது.

02 பக்கம்

## உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்படும்

### பிரதமர் தினேஷ் கண்டியில் தெரிவிப்பு



•யோ.தர்மராஜ்

அரசியலமைப்பு மறுசீரமைப்பு ஊடாக கலப்பு தேர்தல் முறையொன்றை உருவாக்கி உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கதிர்காமத்திலுள்ள கிரிவெவ விகாரையில் லங்கா சமசமாஜக் கட்சியின் 28ஆவது ஆசிர்வாத நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை பலப்படுத்தி, வானிலைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய ...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..






வாராந்தம் தமக்கு வழங்கப்படும் 05 லீற்றர் பெற்றோல் அளவை நாளாந்தம் 05 லீற்றராக அதிகரிக்கக் கோரி வலுசக்தி அமைச்சுக்கு முன்பாக முச்சக்கரவண்டி சாரதிகள் நேற்று கடும் மழையிலும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

## உயர்தர, புலமைப்பரிசில் பரீட்சை திகதிகள் அறிவிப்பு




2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 2022ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை டிசம்பர் மாதம் 4ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதிமுதல் 2023 ஜனவரி மாதம் 2ஆம் திகதிவரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கத் திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு விசேட குழு நியமனம்

அரசாங்கத்தின் பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு வசதியாக நிறுவப்பட்டுள்ள திட்ட அலுவலகங்கள் மற்றும் திட்ட முகாமைத்துவப் பிரிவுகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கே.டி கமல் பத்மசிறி தலைமையிலான இக்குழுவில் என்.கே.ஜி.கே. நெம்மவத்தை, ஆர்.எச். திரு.ருவினிஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை துரிதமாக முன்னெடுக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினால் மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளமை.

திட்ட அலுவலகங்கள் / திட்ட முகாமைத்துவ பிரிவுகளில் நிறைவேற்றப்படக்கூடிய பணிகளை அந்தந்த அமைச்சு / திணைக்களம் / நிறுவனத்தினால் நிறைவேற்ற முடியுமா என ஆராய்தல்.

திட்ட அலுவலகங்கள் / திட்ட முகாமைத்துவ பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என ஆராய்தல்.

திட்ட அலுவலகங்கள் / திட்ட முகாமைத்துவ பிரிவுகள் தற்போது முன்னெடுத்து வரும் பணிகளின் தன்மை காரணமாக அவர்களே அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமா என ஆராய்தல்.

திட்ட அலுவலகங்கள் / திட்ட முகாமைத்துவ பிரிவுகளில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாக உள்ளதா என ஆராய்தல்.

தற்செயலாக அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விடயங்கள் உள்ளனவா என ஆராய்தல் ஆகியனவாகும்.

இந்தக் குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும்.

## மதுபோதையில் அநாகரீகமான நடத்தை:

# உயர்தர மாணவர்கள் மூவர் அநுராதபுரத்தில் கைது

(அநுராதபுரம் செய்தியாளர் )

மதுபோதையில் அநாகரீகமான முறையில் நடந்துகொண்ட உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் மூவரை அநுராதபுரம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அநுராதபுரம் கும்மிச்சங்குளம் பகுதியில் நேற்றைய தினம் ரோந்து நடவடிக்கையில் சென்றுகொண்டிருந்த பொலிஸாரே இவர்களை கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் பெண் மாணவி ஒருவரும் அடங்குகின்றார் என்பது தெரியவந்துள்ளது.

இவர்கள் அநுராதபுரம் நகரிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி பயிலும் மாணவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. விசாரணைகளின் பின்னர் மாணவர்கள் மூவரையும் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது தலா இரண்டு இலட்சம் ரூபா சீரப் பிணையில் பெண் மாணவியையும், ஆண் மாணவர்கள் இருவரையும் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 03ஆம் திகதியன்று மாணவர்களது பெற்றோர்களையும் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் மூவரையும் நீதிமன்றில் ஆஜராகும்படி அநுராதபுரம் நீதிமன்ற நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

## பிரித்தானியாவின்...

அந்நாட்டின் 56ஆவது பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள இவர், மூன்றாவது பெண் பிரதமர் என்ற அந்தஸ்தையும் பெற்றுள்ளார்.

பிரித்தானியாவின் பிரதமராக இருந்த பொரிஸ் ஜோன்சன் பதவி விலகியதையடுத்து அப்பதவிக்கு லிஸ் டிரஸ் போட்டியிட்டார். மேலும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முன்னாள் நிதி அமைச்சர் ரிஷி சுனக்கும் போட்டியிட்டார்.

இருவருக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவிவந்த நிலையில், கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் லிஸ் டிரஸுக்கு அதிக வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேரி எலிசபெத் டிரஸ் 1975ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி பிறந்தார். கன்சர்வேட்டிவ் கட்சியின் உறுப்பினரான இவர், டேவிட் கெமரூன், தெரசா மே, பொரிஸ் ஜோன்சன் ஆகிய பிரதமர்களின் தலைமையில் பல்வேறு முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## 400 சிபெட்கோ நிலையங்கள்...

புதிய கட்டண முறைமைக்கமைய, எரிபொருள் பெற்றுக்கொள்ள விரும்பும் நிலையங்கள் அதற்குரிய தொகையை முதல்நாள் இரவு 9.30 மணிக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு குறித்த நேரத்துக்குள் செலுத்தத் தவறும்பட்சத்தில் எரிபொருள் விநியோகம் இடம்பெறுவதில்லையென சங்கத்தின் தலைவர் குமார ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

எரிபொருளை எங்களால் பெற்றுக்கொள்ள முடியாமல்போனால் இந்நாட்டில் மீண்டும் வரிசைகள் உருவாகும்.

மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 700 எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையிலேயே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த புதிய கட்டண முறையை அறிமுகப்படுத்தியுள்ளது - என்றார்.

## உள்ளூராட்சி மன்றங்களுக்கான...

சிறந்த சூழ்நிலையை உருவாக்கி, நாட்டை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத தேசமாக மாற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஜனநாயக சமூகத்தைப் பலப்படுத்தி, அரசியலமைப்பை திருத்தத்திற்கு உள்ளாக்கி, அதியுயர் சபையான நாடாளுமன்றத்திற்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அதிக அதிகாரங்களை வழங்குவதற்கும் கலப்புத் தேர்தல் முறைமையை உருவாக்குவதற்கும் நாங்கள் அரப்பணிப்புடன் செயற்படுவோம். மேலும், அனைவரும் பங்குபற்றக்கூடிய ஜனநாயக முறைமையையும் உருவாக்குவோம்.

வாழ்க்கைச்சுமை அதிகரித்துள்ள மக்களின் நலன்புரி விடயங்களுக்காக புதிய யுத்திகளுடனான பொருளாதார மறுசீரமைப்புக்காகவும் அரப்பணிப்புடன் செயற்படுவோம்.

14 ஆயிரம் கிராமசேவகர் பிரிவுகளில் மறுசீரமைப்புக்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுப்போம். இதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்காக அரசாங்கத்தின் சார்பில் அனைவருக்கும் பிரதமர் என்ற அடிப்படையில் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

## விடாது மழை...

நாட்டில் ஒன்பது மாவட்டங்களில் அடை மழை பெய்யக்கூடிய வாய்ப்புள்ளதால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் நிலவும் வளிமண்டல தளம்பல் நிலை காரணமாக இந்த கடும் மழை பெய்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்கள் (குறிப்பாக, மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகள்) மற்றும் ஆற்றுப்படுகைகளில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறும் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

மலையகப் பகுதிகளில் வீதிகளைப் பயன்படுத்தும் சாரதிகளையும் மக்களையும் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதேவேளை, சரிந்து விழும் மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## 4 பில். டொலர் நிதியுதவி...

நிலைமையை தீர்ப்பதற்காகவும் இந்த உதவியை நாம் கடந்த சில மாதங்களில் வழங்கியுள்ளோம். நமது நெருங்கிய அயலவர் என்ற வகையில் தொடர்ந்தும் உதவிகளைச் செய்வோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், கடன் வசதியளிப்புத் திட்டத்தின் கீழ் 42 ஆபிரிக்க நாடுகளுக்கு 12 பில்லியன் டொலர் நிதியுதவி இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை அகதிகளை...

யுத்த காலத்தில் இந்தியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்த இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்பும் செயன்முறையை இலகுபடுத்துவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் சந்திமா விக்ரமசிங்க தலைமையிலான இக்குழுவில் குடிவரவு - குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம், வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் நீதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யுத்த காலத்தில் இந்தியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்த இலங்கையரை மீண்டும் அழைத்து வரவேண்டும் என 'ஈழ அகதிகள் புனர்வாழ்விற்கான அமைப்பு' வேண்டுகோள் முன்வைத்திருந்தது. இதுகுறித்து பேசுவதற்காக, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நேற்று (05) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் இதற்கான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் தமிழக மாநிலத்தில் தற்போது சுமார் 58 ஆயிரம் இலங்கையர்கள் அகதிகளாக தங்கியுள்ளதாகவும் அவர்களில் மூவாயிரத்து 800 பேர் மாத்திரமே இலங்கைக்கு திரும்புவதற்கு தயாராக இருப்பதாகவும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது. அதனையடுத்து இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் இலங்கை வருவதை இலகுபடுத்துவதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயமும் இச்செயன்முறையை இலகுபடுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னே, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, நீதி அமைச்சு மற்றும் குடிவரவு- குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் ஈழ அகதிகள் புனர்வாழ்வுக்கான அமைப்பின் பிரதம செயற்பாட்டாளர் சி.எஸ்.சந்திரஹாசன், எஸ்.சூரியகுமாரி உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அர்ஷ்தீப் சிங் குறித்த சர்ச்சை...

ஆசியக்கிண்ணத் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் நேற்றுமுன்தினம் மோதின. இதில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பிடியொன்றை தவறவிட்டதால் இந்திய அணியின் தோல்விக்கு இளம் வீரர் அர்ஷ்தீப் சிங்தான் காரணம் என விமர்சனங்கள் குவிந்து வருகின்றன. போட்டியின் கடைசி தருணத்தில் பாகிஸ்தானின் அதிரடி வீரர் ஆசிப் அலியின் கேட்ச்-ஐ அர்ஷ்தீப் சிங் தவறவிட்டார். இறுதியில் ஆசிப் அலி 8 பந்துகளில் 16 ஓட்டங்களை விளாசி பாகிஸ்தானுக்கு வெற்றியை தேடிக்கொடுத்தார். இதனால் ஆத்திரமடைந்த ரசிகர்கள் அர்ஷ்தீப்பை மோசமாக விமர்சித்து வருகின்றனர். இதற்கெல்லாம் ஒருபடி மேல் சென்ற பாகிஸ்தான் ரசிகர்கள், அர்ஷ்தீப் சிங் ஒரு காலிஸ்தானி என்று கூறி சமூகவலைத்தளங்களில் பரப்பினர். இதனை பார்த்த இந்திய ரசிகர்களும் அவரை காலிஸ்தானி எனக்கூறி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளனர்.

இதுமட்டுமல்லாமல் விக்கிபீடியாவில் அர்ஷ்தீப் சிங்கின் நாடு இந்தியா என்பதை அழித்துவிட்டு காலிஸ்தான் எனக் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில், இந்திய வீரர் மீது மத வெறி தாக்குதல் நடத்தப்படுவதற்கு எதிராக இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதாவது அர்ஷ்தீப்பின் விக்கிபீடியா பக்கத்தில் எப்படி சர்ச்சைக்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பது குறித்து நேரில் வந்து பதிலளிக்க இந்தியாவிலுள்ள விக்கிபீடியா அதிகாரிகளுக்கு இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

## ராஜபக்ஷக்களை...

ராஜபக்ஷக்களே வங்குரோத்துக்கு காரணமானவர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள நவ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகம் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஏப்ரல் 12ஆம் திகதியிலிருந்து இந்த நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. தற்போது பலர் பலவிதமான கருத்துகளைக் கூறுகின்றனர். வங்குரோத்து அடைந்துள்ளதை வெளிப்படையாக அறிவித்ததே பாரிய பிரச்சினையாகும் எனவும் அவ்வாறு கூறாதிருந்தால் அதிலிருந்து மீண்டும் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசென்றிருக்க முடியும் எனவும் பெசில் ராஜபக்ஷவுடன் இருக்கும் பலர் கூறுகின்றனர்.

ஆனால், உண்மையை கூறாததே பிரச்சினைக்கு உண்மையாக காரணமாகும். உண்மைகளை கூறாது, எங்களிடம் போதுமான டொலர் இருக்கின்றது, போதுமான நாணயம் இருக்கின்றது, எங்களால கிலோ மீற்றர் தூரத்துக்கு பாதையை கார்பட் இட முடியும், மேலும் 350 கிலோ மீற்றர் தூரத்துக்கு அதிவேக பாதைகளை உருவாக்க முடியும், ஒரு கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டமென 14 ஆயிரம் கிராமங்களுக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் மற்றும் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுக்கும் 100 வீடுகள் அமைப்போம் போன்ற பல கதைகளை நாம் கேட்டுவிட்டோம்.

ஆனால், இன்று நாட்டிலுள்ள நிர்மாணத் துறை வீழ்ச்சியடைந்துள்ளது. 6 இலட்சம் பேர் வேலையை இழந்துள்ளனர். கொழும்பில் நாங்கள் ஆரம்பித்த பாரிய வீட்டுத்திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. ஜப்பான் உதவியுடன் புகையிரதப் போக்குவரத்துகளையும் ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். ஆனால், இவை அனைத்தும் இன்று முற்றாக முடங்கிபோயுள்ளதுடன், மக்களும் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை கொண்டுசெல்ல முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நான் திறைசேரிக்குச் சென்றபோது, திறைசேரியை விட என்னுடைய கணக்கில் நிதி இருப்பதை தான் அறிந்துகொண்டதாக முன்னாள் நிதி அமைச்சராக இருந்த அலி சப்ரி கூறினார். இதுவே, உண்மையாகும். இதனை வங்குரோத்து எனக் கூறாது, வேறு எவ்வாறு கூற முடியும்.

ராஜபக்ஷக்களே வங்குரோத்துக்கு காரணமானவர்கள். இதனை 2013ஆம் ஆண்டு நான் கூறும்போது, என்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கினர். ஆனால், அதனையும் மீறி மைத்ரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தை அமைப்பதற்கு மக்கள் அதிகாரத்தை வழங்கினர். துரதிர்ஷ்டவசமாக நாங்கள் எதிர்பார்த்த பாதையில் நாடு செல்லாவிட்டாலும், நாட்டை வங்குரோத்து அடைவதற்கு இடமளிக்கவில்லை.

நல்லாட்சியில் பெற்றுக்கொண்ட 12 பில்லியன் டொலரில் 7.5 பில்லியன் டொலரை மீதப்படுத்தியிருந்தோம். ஆனால், இலங்கை ரூபாவை 203 ரூபாவில் வைத்துக்கொள்வதற்காக அதில் 5 பில்லினை கப்ரால் செலவு செய்தார். இவர்களை நீதிமன்றத்தின்முன் கொண்டுவர வேண்டும்.

வீதிகளில் போராடியவர்களையும் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றார்கள் என்று பொது மக்களையும் கைதுசெய்யக்கூடாது, அவர்களுக்கு பதிலாக நாட்டை வங்குரோத்தடைய செய்து 55 இலட்சம் குடும்பங்களை வீதியில் தள்ளிய அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் அமைச்சுகளின் அதிகாரிகளையுமே கைதுசெய்ய வேண்டும்.

ஜூலை 9ஆம் திகதி உண்மையான மக்கள் போராட்டம் வெடித்தது. 15 – 20 ஆயிரம் மக்களே வருகை தருவார்கள், அவர்களுக்கு துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டும் என்ற கட்டளை வழங்கப்பட்டிருந்தது. போராட்ட இடத்துக்கு நான் சென்றபோது இதனைக் கூறினர். மக்களுக்கு துப்பாக்கிச்சூடு நடத்தப்படுமாயின் அங்கு நாங்கள் இருக்கவேண்டும் எனக் கூறினோம்.

அதனையும் மீறி மக்கள் போராட்டத்தில் ராஜபக்ஷக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அன்று வர்த்தமானியை மீளப் பெறுவதுபோன்று, மக்கள் போராட்டத்தையும் பின்னோக்கித் தள்ளுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அடிப்படைவாதங்களின்றி நாங்கள் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால் எங்களுக்கு நடுநிலை வேலைத்திட்டங்கள் வேண்டும் - என்றார்.

## நாட்டை நினைத்து...

தலைமையகத்தை திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டுக்கு புதிய பாதை, புதிய தலைவர் தேவையாகவுள்ளது. முழு நாட்டு மக்களும் வீதிக்கும் இறங்கிப் போராடிய மக்களையும் காலிமுகத்திடலில் போராடிய இளைஞர், யுவதிகளையும் மறந்துவிட்டு அல்லது புறந்தள்ளிவிட்டு இனி யாராலும் வெற்றிகரமான அரசியலை செய்வதற்கு முடியாது.

சுதந்திரம் கிடைத்தது தொடக்கம் பல்வேறு கட்சிகளுக்கு நாட்டின் ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டு, நாடு முன்னோக்கிக் கொண்டு செல்லப்பட்டது. ஆனால், கடந்த 20 – 25 வருடங்களாக இரு வேறு ஆட்சிகளால் நாடு சீர்குலைக்கப்பட்டதை மக்கள் பொறுமையாக பார்த்துக்கொண்டிருந்தனர். நீண்டகாலமாக துன்பங்களை அடக்கிவைத்திருக்கும் இலங்கையர்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் கிளர்ந்தெழுவார்கள். இதற்கு பல வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன. தொடர்ந்து சந்தர்ப்பத்தை வழங்கி, பொறுமையாக பார்த்துக்கொண்டிருக்கும் மக்கள் முடியாத கட்டத்தில் கிளர்ந்தெழுவார்கள். அது எரிமலையை போன்று வெடிக்கும்.

இதுவரை இடம்பெற்ற போராட்டத்தைவிட காலிமுகத்திடல் போராட்டம் வேறுபட்டதாகும். ஆட்சியை கலைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு மாற்றத்தையும் அவர்கள் கோரியிருந்தனர். ஊழல் இல்லாத, மக்களின் நிலைப்பாடுகளை, கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அரசாங்கம் வேண்டும் என்ற இடத்துக்கு மக்கள் வந்துவிட் டனர்.

70 ஆண்டுகளில் சிறந்த தலைவர்கள் நாட்டை வழிநடத்தி, முன்னோக்கிக் கொண்டுசென்றனர். சில சில தவறுகள் ஏற்பட்டன. 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள், மக்கள் வாக்களித்த பின்னர் தங்களுக்கு விரும்பியதை செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தனர். அதற்கு எதிராக குரல் கொடுப்பவர்களை கொலை செய்வார்கள் அல்லது துன்புறுத்தல் செய்வார்கள்.

வாக்களித்துள்ளதால் 5 வருடங்கள் ஆட்சியில் இருப்போம் என்றே இன்றும் கூறுகின்றனர். ஆட்சியிலுள்ளவர்கள் தேர்தல் ஒன்றை கொடுக்காவிட்டால், ஜனநாயக ரீதியில், சமாதானமான முறையில் ஒன்றிணைந்து ஆட்சியாளர்களை வீட்டுக்குச் செல்லுமாறு கூறினால் அதுவும் தேர்தலே. அதனையும் கேட்காது, ஆட்சி அதிகாரத்தை பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், இன்று ஆரம்பித்துள்ள நவலங்கா சுதந்திரக் கட்சியினர் பழைய அரசியல் முறைமையை கடைப்பிடிக்க வேண்டாம்.

அனைவரையும் ஒன்றிணைத்துக்கொள்ள வேண்டும் என குமார வெல்கம கூறினார். ஆனால், திருடர்களை மாத்திரம் இணைத்துக்கொள்ள வேண்டாம். யாராக இருந்தாலும் சரியாக தேர்ந்தெடுங்கள். இல்லையேல் முன்னோக்கிச் செல்ல முடியாது. திருடர்களில்லாது, மக்களுக்காக சேவையாற்றக்கூடிய கண்ணோட்டம் கொண்ட ஆட்சியே வேண்டும்.

ஐந்து வருடங்கள் முடிந்தவரை நாட்டிலுள்ள சொத்துக்களை கொள்ளயடித்துக்கொண்டு வீட்டுக்குச் செல்வோம் என்றே உறுப்பினர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். உலகில் எந்தவொரு நாடும் இவ்வாறு வங்குரோத்து அடைந்ததே இல்லை. நாட்டில் அந்நிய செலாவணியோ, ரூபாவோ இல்லை. ஆபிரிக்காவை விடவும் மிக மோசமான நிலையில் இருப்பது எனக்கு வெட்கமாகவுள்ளது.

வேறு நாடுகளுக்குச் செல்வதே வெட்கமாகவுள்ளது. தனியொரு ராஜபக்ஷக்களின் ஊழல் நிறைந்த அரசியலே இந்த நிலைமைக்குக் காரணமாகும் - என்றார்.

## வெல்கம தலைமையில்...

பிரதமர் பதவி தருவதாக யார் கூறினாலும் அதற்கு ஏமாந்து, நாடாளுமன்றத்திற்குள் வந்துவிட வேண்டாம். அங்கு நாங்கள் இருக்கின்றோம். எங்களுடைய வாயும் சரியில்லை. என்ன கூறுவோம் என யாருக்கும் தெரியாது. எனவே, அரசியலை விட்டு விலகி வீட்டிலேயே இருந்துவிடுங்கள் - என நாடாளுமன்ற உறுப்பினரும் நவ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான குமார வெல்கம தெரிவித்தார்.

தன்னுடைய தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள நவ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை கொழும்பில் திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

உரியநேரத்தில் ஜனாதிபதித் தேர்தலை வைத்து ஜனாதிபதியாகி, உரிய நேரத்தில் ஓய்வுபெற்ற ஒரே தலைவராக சந்திரிகா இருக்கின்றார். மஹிந்த ராஜபக்ஷ சிறந்தவராக இருந்தாலும், நாட்டை விட குடும்பத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். கடந்த தேர்தலில் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவருக்கு ஜனாதிபதி பதவியை வழங்கியிருந்தால், இன்று வேறொரு ஜனாதிபதியாக இருந்திருப்பதுடன், அவருக்கு ஏற்பட்ட அவமானமும் ஏற்பட்டிருக்காது.

ஆனால், அவர் அந்த முடிவை எடுக்காதமையினால், 2 வருடங்களுக்கு குறைவான காலத்திலேயே கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறும் நிலைமை ஏற்பட்டதுடன், நாட்டை விட்டு வெளியேறினார். அவர் மீண்டும் நாடு திரும்பியுள்ளார். உங்களை (கோட்டாபய ராஜபக்ஷ) வாழ்த்துகின்றோம். நீங்கள் இவ்வாறே இருந்துவிடுங்கள். அரசியலுக்கு மாத்திரம் வந்துவிட வேண்டாம்.

நீங்கள் அரசியலுக்கு பொருத்தமற்றவர். ஆனால், சிலர் பிரதமர் பதவியை தருவதாகவும் கூறுகின்றனர். ஆனால், உங்கள் குடும்பத்துடன் இருப்பதே உங்களுக்கு நல்லது. யாருடைய ஏமாற்றத்திலும் சிக்கிவிட வேண்டாம். நாங்களும் நாடாளுமன்றத்தில் இருக்கின்றோம். எங்களுடைய வாய்கள் சரியில்லை. என்ன கூறுவோம் என்று யாருக்கும் தெரியாது. எனவே, நீங்கள் அரசியலை விட்டு ஒதுங்கி வீட்டிலேயே இருந்துவிடுங்கள்.

இதேவேளை, நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. எனினும், உண்மையான போராட்டக்காரர்களே நாட்டை மீட்டெடுத்தனர். இன்று நாங்கள் இவ்வாறிருப்பதற்கும் அவர்களே காரணம். போராட்டத்திற்கு பின்னாலுள்ள சிலர், தங்களால் ஜனநாயக முறையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்பதால் நாட்டை இரத்த ஆறாக மாற்றியாவது, ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இந்த நெருக்கடியை இலகுவில் தீர்க்க முடியாது. இன்னும் 1 - 2 வருடங்களுக்கு இந்த நெருக்கடியிலிருந்து மீளவே முடியாது. இன்று அரச துறையிலும் தனியார்துறையிலும் வேலைவாய்ப்புகள் இல்லை. வேலைவாய்ப்பை வழங்கினாலும் சம்பளம் வழங்குவதற்கு நிதியில்லை.

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதிக்கு முன்னோக்கிச் செல்ல முடியாது. அதற்கு மொட்டு கட்சியிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் இடமளிக்கமாட்டார்கள். எதுவும் இல்லாத, ஒரு உறுப்பினர் கூட இல்லாத, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியதால் மொட்டிலுள்ள சிலர் குரோதத்துடனும் பொறாமையுடனும் இருக்கின்றனர். மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தினேஷ் பிரதமராகியுள்ளார். ஆனால், 69 இலட்ச வாக்குகள் எடுத்தவர் வீட்டுக்குச் சென்றுவிட்டதாகவே அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

ஜனாதிபதி தற்போது பொறுமையாக செல்ல வேண்டும். பெப்ரவரியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் ராஜபக்ஷக்களை விரட்டியடிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பின்னர், அனைவரும் இணைந்து முன்னோக்கிச் செல்ல முடியும் - என்றார்.

# கிளைபோசேட் இறக்குமதிக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவில் அனுமதி

## நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஹர்ஷ டி சில்வா அறிவிப்பு





பெருந்தோட்டத்துறையில் களைகொல்லியாகப் பயன்படுத்தப்படும் கிளைபோசேட்டை இறக்குமதி செய்வது தொடர்பில் 1969ஆம் ஆண்டு 01ஆம் இலக்க ஏற்றுமதி, இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவில் கவனத்திற்கொள்ளப்பட்டதுடன், நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழு அண்மையில் கூடியிருந்தது. இதன்போது அதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய இந்த ஒழுங்குவிதிகள் அடங்கிய 2291/44ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நாளையதினம் (06) அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பூச்சிகொல்லிகள் பதிவாளர் நாயகத்தின் பரிந்துரையின்கீழ் கிளைபோசேட் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படவுள்ளது. இந்த ஒழுங்குவிதிக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டாலும், அது நிபந்தனைக்கு உட்பட்டதாகவே வழங்கப்படுகிறது என குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் அரசாங்க நிதி பற்றிய குழுவின் பரிந்துரைக்கமைய இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்கள் தொடர்பில் இந்த கிளைபோசேட் பயன்பாடு குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கலந்துரையடலை அடுத்து தயாரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் விரிவான கலந்துரையாடலொன்றை நடத்திய பின்னர் எதிர்கால தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்படவுள்ள சட்டமூலங்கள் மற்றும் ஏனைய துணைச் சட்டங்கள் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு முற்கூட்டியே வழங்கப்பட வேண்டும் என்றும், அவை குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் மாத்திரமே அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பெருந்தோட்டத்துறையில் களைகொல்லியாகப் பயன்படுத்தப்படும் கிளைபோசேட் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய சுகாதார தாக்கங்களைக் கருத்திற்கொண்டு கிளைபோசேட் இறக்குமதி தடைசெய்யப்பட்டாலும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதிக்குக் காணப்படும் தடைகள் மற்றும் வெலிகம தென்னோலைகள் பாதிக்கப்படும் நோயை ஒழிப்பது போன்ற காரணங்களுக்காக வரையறுக்கப்பட்ட வகையில் கிளைபோசேட் இறக்குமதி செய்யப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன், இதனால் ஏற்படக்கூடிய சுகாதார மற்றும் சூழலியல் தாக்கங்கள் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் தமது கருத்துகளைத் தெரிவித்தனர்.

இதற்கமைய இது தொடர்பில் எதிர்காலத்தில் விரிவான கலந்துரையாடலை நடத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கும் அவசியம் குறித்தும் குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், எம்.ஏ.சுமந்திரன், ஷெஹான் சேமசிங்க, பிரமித்த பண்டார தென்னக்கோன், சுரேன் ராகவன், ஹர்ஷன ராஜகருணா, சமிந்த விஜயசிறி, அநுப பஸ்குவல், ரஞ்சித் பண்டார ஆகியோர் இக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன், நிதி அமைச்சு, ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், பெருந்தோட்ட அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் பூச்சிகொல்லிகள் பதிவாளர் நாயக அலுவலகத்தின் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டிருந்ததுடன், சுகாதார அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் ஒன்லைனூடாக இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்காகும்.

# தேசிய உதைபந்தாட்ட அணிக்கு அல்ஹிக்மா கல்லூரி மாணவன் தெரிவு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

17 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணிக்கு கொழும்பு 12, அல்ஹிக்மா கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் முஹம்மது பாஸில் ஹஸன் முஹம்மது பாதிஹ் தெரிவாகியுள்ளார்.

அண்மையில் தேசிய ரீதியில் நடைபெற்ற தெரிவுப்போட்டிகளில் உள்வாங்கப்பட்ட முப்பது வீரர்களில் ஒருவரான பாதிஹ் பயிற்சிகளின் பின் இறுதித் தேர்வில் தெரிவாகினார். இலங்கையில் நடைபெறவிருக்கும் தெற்காசிய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இலங்கை சார்பில் பங்களாதேஷ் - இலங்கைக்கிடையில் ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நடைபெறும் 17 வயதுக்குட்பட்டோர் அணியில் களமிறங்குகிறார். கல்லூரி விளையாட்டில் கழகத்தின் ஆர்வமிக்க வீரரான பாதிஹ் பல்வேறு உதைபந்தாட்ட போட்டிகளில் பிரகாசிக்கும் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.



கல்லூரி அதிபர் எம்.முஸ்தபா மஃஸூரின் வழிகாட்டலில் அல்-ஹிக்மா பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் விளையாட்டுத்துறை ஊக்குவிப்புக்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாடசாலை சமூகத்தினர் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் வீரருக்கு தெரிவித்துக் கொள்கின்றனர்.

# அரலகங்விலவிலுள்ள களஞ்சியத்தில் 65 ஆயிரம் கிலோவுக்கு அதிகமான நெற்தொகை சேதம்

நாட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு போகத்தின்போது கொள்வனவு செய்யப்பட்ட 65 ஆயிரம் கிலோவுக்கு அதிகமான நெல் தொகை அரலகங்விலவிலுள்ள களஞ்சியத்தில் அழிவடைந்துள்ளதாக மகாவெலி நெல் வலய விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த களஞ்சியத்துக்கு ஆரம்பத்தில் மகாவெலி நெல் வலயத்துக்கு சொந்தமான அரலகங்வில, விஜயபுர மற்றும் பொலன்னறுவை உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல் தொகை தற்போது அந்த களஞ்சியசாலையிலேயே அழிவடைந்து வருவதாக மகாவெலி நெல் வலய வர்த்தக குழுவில் இருந்த முன்னாள் செயலாளர் சரத் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒருசில நெற்தொகை உக்கல் அடைந்துள்ள துடன் களஞ்சியத்தின் கூரை உடைந்துள்ள தால், நீர் நுழைந்த ஒருதொகை நெல்



கன்றுகள் வளர்ந்துள்ளதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நெல் களஞ்சியத்துக்கு ஒரு முறை மாத்திரமே நெல் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், அதற்கு அருகில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள களஞ்சிய கட்டடம் இதுவரை திறைக்கப்படவில்லை என்றும் விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வாறு அழிவடைந்துள்ள நெல் தொகை 2015ஆம் ஆண்டுபோகத்தின்போது கொள்வனவு செய்யப்பட்ட நெல் தொகையென மகாவெல நெல் வலயத்தின் வர்த்தகக் குழுவின் முன்னாள் செயலாளர் சரத் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த நெற்களஞ்சியம் யானைகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒருசில நபர்கள் களஞ்சியத்தின் கூரைகளை அகற்றி எடுக்க முயன்றுள்ளதாகவும் விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த வருடம் மகாவலி பி வலயத்திலுள்ள விஜயபாபுர பிரிவு விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்கான களஞ்சியசாலைகளை தயார்படுத்துமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாகவும் சரத் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர் ஆகியோர் உடனடி கவனம் செலுத்தி அதனைப் பயன்படுத்திக்கொள்ளும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமென மகாவலி பி பிரதேச விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



பொலிஸ் பிரிவின் 156ஆவது வருடத்தை முன்னிட்டு இஸ்லாமிய சமய நிகழ்வுகள் கடந்த 3ஆம் திகதி கொழும்பு - 7 தெவட்டஹா ஜூம்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரம கலந்துகொண்டார். தெவட்டஹா பள்ளிவாசலின் நிர்வாக சபைத் தலைவர் றியாஸ் சாலி பொன்னாடை போர்த்தி பொலிஸ் மா அதிபரை வாழ்த்துவதைப் படத்தில் காணலாம் . சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஏ.எம்.நவாஸ் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜவ்பர், உதவிப் பொலிஸ் அதிகாரிகளான எம்.ஆர்.மொஹமட், துவான் மீடின் உட்பட உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (படம் - அஷ்ரப் ஏ சமத்)

## பி - 627 ஆழ்கடல் ஊடுருவல் கப்பலின்

# இலங்கை நோக்கிய பயணம் ஆரம்பம்



அமெரிக்காவால் இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட பி - 627 ஆழ்கடல் ஊடுருவல் கப்பல் சியெட்டெல் துறைமுகத்திலிருந்து இலங்கைக்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது.

2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அமெரிக்காவின் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்ட இந்தக் கப்பல், கடற்படையின் செயற்பாட்டுத் தேவைக்கேற்ப நவீனப்படுத்தப்பட்டதன் பின்னர் கொழும்பு துறைமுகத்தை நோக்கி கடந்த மூன்றாம் திகதி பயணத்தை ஆரம்பித்துள்ளதாக கடற்படையின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்தக் கப்பலானது எதிர்வரும் நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

ஹமில்டன் கிளாஸ் ஹை எண்டூரன்ஸ் கட்டர் வகுப்பைச் சேர்ந்த இந்தக் கப்பல் 115 மீற்றர் நீளமும், அதிகபட்சமாக மணிக்கு 29 கடல் மைல் வேகமும், இடைமறிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறன் கொண்டது. ஒரேநேரத்தில் குறைந்தது 14,000 கடல் மைல் தூரம் பயணிக்கக்கூடிய நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் வசதிகளுடன் இது பொருத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தக் கப்பல் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப் பட்டதன் பின்னர், இலங்கை கடற்படையின் செயற்பாட்டுத் தேவைகளுக்கேற்ப தேவையான தொழில்நுட்ப மற்றும் நவீன சாதனங்களைச் சேர்த்து நவீனப்படுத்திய பின்னர், இலங்கை கடற்படையின் அதிரடிப்படை, பி - 627 கப்பலை துறைமுகத்திற்கு கொண்டு வரவுள்ளது.

# ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்த 37 பேர் கைது

கோட்டை ஜனாதிபதி செயலகத்தில் பலவந்தமாக நுழைந்து அங்குள்ள சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் அடையாளங்காணப்பட்ட 71 சந்தேகநபர்களில் இதுவரையில் 37 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களில் 08 பேர் பெண் கைதிகள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 09ஆம் திகதி நாடு முழுவதிலுமிருந்து வருகை தந்திருந்த போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்துக்குள் பலவந்தமாக நுழைந்து, அங்கு தங்கியிருந்து அங்குள்ள சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை, பொருட்களை திருடியமை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இதன்போது அடையாளங்காணப்பட்ட 71 சந்தேகநபர்களின் புகைப்படங்கள் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களில் 37 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவர்களில் 05 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலும் சிலர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.




# கிழக்குப் பல்கலையில் படுகொலை செய்யப்பட்டோரின் 32ஆவது நினைவு தினம் பல்கலை மாணவர் ஒன்றியத்தால் அனுஷ்டிப்பு







(கனகராசா சரவணன்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 1990ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டவர்களின் 32ஆவது நினைவேந்தல் கிழக்குப் பல்கலைக்கழத்தின் முன்னால் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று திங்கட்கிழமை (5) ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியதுடன், படுகொலை செய்யப்பட்டோருக்கு நீதிகோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

கடந்த 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ஆம் திகதி இடம்பெற்ற வன்செயலின்போது வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்துள்ள நிலையில் சுமார் 176இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியத்தினால் பல்கலைக்கழத்தின் முன்னால் ஏற்பாடுசெய்யப்பட்ட 32ஆவது நினைவேந்தலையிட்டு படுகொலை செய்யப்பட்வர்களின் உறவுகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றுதிரண்டு படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டோருக்கு நீதிவேண்டும், எங்கே எங்கே எமது உறவுகள், 1990-9-5 பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட உறவுகள் எங்கே, இன்னும் எத்தனை நாட்கள் நாங்கள் நீதிக்காக போராடுவது, அரசே சாட்சிகளை அச்சுறுத்துவதை நிறுத்து, எமது உறவுகள் எமக்கு வேண்டும் என சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, செப்டெம்பர் 06ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# என்ன செய்வார் கோட்டாபய?

ஜூலை 10 ஆம் திகதி நாட்டை விட்டுத் தப்பி ஓடி, முதலில் மாலைதீவிலும், பின்னர் சிங்கப்பூரிலும் தங்கி இருந்தபடி ஜனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்த கோட்டாபய ராஜபக்ஷ, ஐம்பது நாட்கள் அஞ்ஞாதவாசத்தின் பின்னர் நாடு திரும்பிவிட்டார்.

தமக்கென கொழும்பில் விசேடமாக ஒதுக்கப்பட்ட அரசு இல்லத்திலும் அவர் குடியேறிவிட்டார். அடுத்து என்ன என்பதே கேள்வி. அரசியல் வட்டாரங்களில் பலவிதமான கருத்துகள் பரிமாறப்படுகின்றன.

அவரை ஜனாதிபதி பதவியில் இருந்து விலகி வீட்டுக்குப் போகும்படிதான் மக்கள் போராட்டங்கள் வெடித்தன. மக்களின் கோரிக்கையே "கோட்டா கோ ஹோம்" ஆகத்தான் இருந்தது.

அவர் பதவியை விட்டு விலகி விட்டார். தமக்கு எதிராக அரசியல் ரீதியில் போராடிய மக்களுடைய கிளர்ச்சியின் தீவிரத்தைக் கண்டு நடுங்கிய கோட்டாபய, அவர்களுக்கு எதிராகத் தமது நிறைவேற்றதிகாரத்தைப் பிரயோகித்து, அடக்குமுறையை ஏவி விடுவதைத் தவிர்த்து, தாமாகவே நாட்டை விட்டுத் தப்பி ஓடி, பெரும் களேபரத்தைத் தவிர்த்துக் கொண்டார்.

மக்கள் அவரை ஜனாதிபதி பதவியைத் துறந்து வீட்டுக்குப் போகும்படிதான் பணித்தார்கள். அவர் அதன்படி பதவியைத் துறந்துவிட்டார். அதன் பின்னர் அவர் வீட்டுக்குத் திரும்பலாம். அவரை பதவியை துறந்து வீட்டுக்குப் போகும்படி கோரிய மக்களுக்கு அவர் வீட்டுக்கு திரும்புவதை அனுமதிக்க வேண்டிய கடப்பாடும் உண்டு. அதனால்தான் அவரின் மீள் வருகையையொட்டி அதிக கூப்பாடுகள், எதிர்ப்புகள், குழப்பங்கள் ஏற்படவில்லை.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக நாட்டை விட்டு வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதியாக நாடு திரும்பி இருக்கின்றார். இனி, அரசியலுக்கு வருவதும், வராததும் அவரது மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடுகின்றமை போல அவரே தீர்மானிக்க வேண்டிய விடயம். அதேபோல அவர் அரசியலுக்கு திரும்பினால் அவரை ஏற்பதும், ஏற்காமல் நிராகரிப்பதும் மக்கள் தீர்மானிக்கின்ற விவகாரம். கோட்டாபய ராஜபக்ஷ அரசியலுக்கு வரலாம். அல்லது வராமலும் விடலாம்.

ஆனால், அவர் முன்னர் அமர்ந்திருந்த பதவி நிலைகளை ஒட்டி அவர் தலைக்கு மேல் கத்தி தொங்கிக் கொண்டிருக்கின்றது என்பதுதான் முக்கியம்.

பாதுகாப்புச் செயலாளராக அவர் இருந்தபோது ஆற்றிய, ஆற்றாமல் விட்ட பொறுப்புகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் வரை அவருக்கு எதிரான பல குற்றச்சாட்டுகள் உள்ளன. யுத்தக் குற்றங்கள், மனித மாண்புகளுக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்று அவற்றின் பட்டியல் நீண்டது. அதேபோல அவர் ஜனாதிபதியாக வந்த பின்னர் அவருக்கும், அவரது அரசுக்கும் எதிராக சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகளும் அதிகம்.

அரசை வழிநடத்துதலில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகள், ஊழல்கள், மோசடிக் குற்றச்சாட்டுகள், அரச நிதியைத் தவறாகக் கையாண்டமை, மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் எனப் பல உண்டு.

அவை எல்லாம் தொடர்பிலும் பொறுப்புக் கூறல் கடப்பாடு அவருக்குள்ளது. அவர் நாடு திரும்பியமை அந்தப் பொறுப்புக் கூறல் கடப்பாட்டை அவர் நிறைவு செய்யவும், நீதி தன் கடமையை ஆற்றவும் உதவும் என்பதால் அவர் வருகை எதிர்க்கப்படாமல் இருக்க வேண்டியதுதான்.

ஆனால், நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சீதா அரம்பேபொல விடுத்திருக்கும் அறிக்கையொன்றில், கோட்டா நாடாளுமன்றம் வருவதாயின் அவருக்கு தனது எம்.பி. பதவியை விட்டுக்கொடுக்க தயாரென்று கூறியிருக்கிறார். மறுபுறம் பொதுஜன பெரமுனவும் அரசியல் பிரவேசத்திற்கான அழைப்பினை கோட்டாபயவுக்கு விடுக்கவுள்ளதாக தெரிகிறது.

கோட்டாபயவை விமான நிலையத்திற்கு வரவேற்க சென்றவர்களாயினும் சரி, அவருடன் கூடவே இருந்து இப்போது தனித்தவில் வசிக்கும் விமல் வீரவங்ச, ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரும் சரி, பட்டறிவை மறந்துவிட்டனர் போலும். என்ன காரணங்களுக்காக மக்கள் அவர்களை வெறுத்தார்கள் என்ற அடிப்படையைப் புரிந்துகொள்ளாமல், மீண்டும் உசுப்பேற்றி கோட்டாபயவை அரசியலுக்குள் கொண்டுவர முயல்கின்றனர்.

கோட்டாபய நாடாளுமன்றம் சென்றாலும் அவர் மீதான மக்களின் அதிருப்தி மனநிலை மாறிவிடாது. தனது வெளிநாட்டுப் பயணங்களுக்கான ஒரு வசதியாக அவர் இந்தப் பதவியை பயன்படுத்தலாம். ஆனாலும், நினைத்த நேரத்தில் நினைத்தபடி அவருக்கான விசா தூதரகங்களில் கிடைத்துவிடுமா என்பது மற்றுமொரு கேள்வி. இப்போதைய நிலையில், அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு இறுதிக்காலத்தை அமைதியாகவும், நிம்மதியாகவும் கழிப்பதே கோட்டா முன் உள்ள சிறந்த தெரிவு. இரவு விழுந்த குழியில் பகலிலும் விழுவதா என்பதை அவர்தான் தீர்மானிக்கவேண்டும்.

# மூழ்கிய கப்பலை கரைசேர்த்த மாலுமி ஜனாதிபதி ரணில்

## நாடாளுமன்றில் முஷாரப் எம்.பி. புகழாரம்





மக்களை உசுப்பேத்தும் பேச்சுகள் நிறுத்தப்பட வேண்டும். தனது பெயர் மக்கள் மத்தியில் பேசுபொருளாக மாற வேண்டும் என்பதற்காக பொய்யான தகவல்களை கூறாதீர்கள். இதனாலேயே மக்கள் கிளர்ச்சி ஏற்படுவதாக எஸ்.எம்.எம்.முஷாரப் எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

இவ்வாறானவர்களின் உரைகளை மக்கள் நம்புவதும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய அவர், இது வேதனை தரும் விடயம் என்றும் கூறினார். இடைக்கால வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய எஸ்.எம்.எம்.முஷாரப் எம்.பி,

மூழ்குகின்ற கப்பலில் மாலுமியாக செயற்பட முடியாது என்று நழுவிக்கொண்ட தலைவர்கள் மத்தியில், அந்த கப்பலை நான் எப்படியாவது கரைசேர்ப்பேன் என்று பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணிலின் தைரியத்தை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன். அத்தோடு இந்த நாடு அவருக்கு என்றென்றும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இரண்டு விதமான உரைகளைப் பார்க்கின்றேன். ஒன்று கலரிக்குப் பேசுகின்ற உரை. மக்களை உசுப்பேற்றுகின்ற, மக்களை திசை மாற்றுகின்ற, பொய்யான விடயமாக இருந்தாலும் மக்களிடம் பேசுபொருளாக இருக்கவேண்டும் என்பதற்காக உணர்ச்சிகளைக் கிளப்புகின்ற உரைகளையும் கேட்கின்றேன்.

உண்மையாக இந்த நாட்டின் மீது பற்றுக்கொண்ட நாட்டின் பொருளாதாரத்தை சரியான முறையில் திட்டமிடுவதற்கான வழிவகைகளைக் கொண்டு உரையாற்றுகின்ற ஆழமான உரைகளும் அவ்வப்போது இடம்பெறுவதையும் கேட்க முடிகின்றது.

இங்கு மிகுந்த கவலை என்னவென்றால் கூடுதலான பொதுமக்கள் இவ்வாறான கலரிக்குப் பேசும் உரைகளுக்குப் பின்னால் சென்று எடுக்கின்ற தீர்மானங்கள்தான் பிழையானவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஆக்குகின்றது.

கோட்டாபய ஜனாதிபதியாக இருந்தபோது எடுக்கப்பட்ட தீர்மானங்களில் எங்கே நாம் தவறிழைத்திருக்கின்றோம் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அது குறித்த மறு பரிசீலனை அவசியம்.அரச மற்றும் எதிர்த்தரப்புக்கும் இது அவசியம்.

வெற் வரி இப்போது 12 வீதத்தில் இருந்து 15 வீதமாக உயர்த்தப்பட்டதற்கு எதிராக எதிர்த்தரப்பில் சிலர் பேசினார்கள். விலை இன்னும் அதிகரிக்கும் என்று உசுப்பேத்திப் பேசினார்கள். இதே அரசாங்கம் வெற் வரியை 8 வீதமாக குறைத்தபோதும் கூட இந்த நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சியை காணப்போகிறது - வெற் வரி குறைக்கப்பட்டது தவறென பொருளாதார நிபுணர்கள் பேசினார்கள்.

மக்கள் நலனுக்காக அன்று வெற் வரி குறைக்கப்பட்டபோது பாராட்டாத எதிர்தரப்பினர் இப்போது குறைகாண முயல்கின்றனர். அப்படி செய்தாலும் தப்பு. இப்படி செய்தாலும் தப்பு. இதற்காகத்தான் ஆரம்பத்திலேயே கூறினேன், இது மக்களை உசுப்பேத்தும் பேச்சுகள் என்று.

சமஷ்டி முறைமை உலகமெங்கும் இருக்கிறது. சமஷ்டி என்கின்ற அழகிய வார்த்தை பல்வேறு இனங்கள் கொண்ட ஒரு தேசத்தை ஒற்றுமையாக சீர்செய்து, கட்டமைத்து, ஒழுங்கான தேசமாக ஒரு தீர்வாக உலகம் முழுவதும் இருக்கின்றது. அது ஒரு சிறந்த தீர்வு முயற்சி. அதனை வைத்து பெரும் பீதியையே இந்த நாட்டில் உருவாக்கினர். அதேபோல் ஒரு பீதி இன்று ஐ.எம்.எப். இற்கும் ஏற்பட்டிருக்கிறது.

1965ஆம் ஆண்டு முதல் 2019 வரை 16 தடவைகள் ஐ.எம்.எப். உடன் இணைந்து செயற்பட்டிருக்கிறோம். ஆக , இந்த நாட்டில் இதுவொரு புதிய விடயமல்ல.

ஐ.எம்.எப். உடன் இணைந்து செயற்படுவதிலுள்ள நன்மை , தீமை என்ன என்பதைப் பற்றி உண்மைக்கு உண்மையான திறந்த விவாதமொன்று இங்கு மேற்கொள்ளப்பட வேண்டும். அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழக விரிவுரையாளர் இராமச்சந்திர அத்துக்கோரளவின் அறிக்கையின்படி,

1965 முதல் 2019 வரையான ஐ.எம்.எப். உடனான இணைவின் பின்னர் இலங்கைக்கான 4.4 பில்லியன் டொலர் பொருந்துகையில் 3.5 பில். டொலர் கிடைத்திருப்பதாகவும், இதனால் பொருளாதார வளர்ச்சி 1.26 வீதத்தினால் அதிகரித்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

இப்போது, 2.9 பில்லியனுக்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. அனைத்தும் முழுமையாக கிடைக்கும்போது நாட்டின் பொருளாதார வளர்ச்சி 1.45 வீதமாக அதிகரிக்க சந்தர்ப்பம் உள்ளது.

அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்படப் போகின்றன என்று பேசுகிறோம். நாட்டின் சொத்துகள் விற்கப்படவுள்ளன என்று தவறான தகவல்களை பரப்புகின்றோம். இவ்வாறுதான் எம்.சி.சி. ஒப்பந்தத்தைப் பற்றி பேசினோம். எம்.சி.சி. ஒப்பந்தத்தில் என்ன இருக்கிறது என்று பலருக்கு தெரியாது. ஸ்ரீலங்கன் விமான சேவை இன்று பாரிய நஷ்டத்தில் இயங்குகின்றது. இதுபோல் பல அரச நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன. நாட்டின் தேசிய வருமானத்தில் சுகாதாரம் மற்றும் கல்விக்கு ஒதுக்கப்படும் நிதியை விட அதிகமாக, நஷ்டத்தில் இயங்கும் இவ்வாறான நிறுவனங்களுக்கு வழங்கவேண்டி உள்ளது.

2008இல் எமிரேட்ஸிடம் இருந்து மீளப் பெறப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை, இதுவரை 350 மில்லியன் டொலருக்கு அதிகமான நஷ்டத்தை அடைந்திருக்கிறது.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தை 1997ஆம் ஆண்டு ஜப்பானிய நிறுவனத்திற்கு பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் வழங்கியிருந்தோம். இதன் காரணமாக தெற்காசியாவில் 4G அலைக்கற்றை பயன்படுத்திய நாடு என்ற பெருமையைப் பெற்றோம். இப்போது அது வெற்றிகரமான அரச நிறுவனமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்த அரசாங்கத்தின் பொருளாதார ரீதியாக விழுந்த மிகப்பெரும் அடியாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனை விவகாரத்தைக் குறிப்பிடலாம். இந்தியாவிற்கும், ஜப்பானிற்கும் கிழக்கு முனையத்தைக் கொடுப்பதற்கான பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இது 480 மில்லியனுக்கான ஒப்பந்தமாகும். கடந்த ஆட்சியில் பொருந்தப்பட்ட விடயம் இந்த ஆட்சியில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவில்லை. ஆட்சியாளர்கள் மாறினாலும், அரசாங்கமாக உடன்பட்ட விடயத்தை செய்யவில்லை. ஏன் செய்யவில்லை என்றால் பல்வேறு எதிர்ப்புகள் வந்தன.

கலரிக்குப் பேசுபவர்கள் நாட்டை விற்கப் போகின்றார்கள் என்ற கோஷத்தை முன்வைத்தனர். இதனால்தான் அதனை செய்ய முடியாமல் போனது. முன்னர் பொருந்தப்பட்ட விடயத்தை இந்த அரசாங்கமோ, கோட்டபாய ராஜபக்ஷவோ செய்யவில்லை என்பதற்காக நாடு அவர்களைப் புகழவோ, நன்றி பாராட்டவோ இல்லை என்பதை ஞாபகப்படுத்துகின்றேன்.

இவ்வாறான பிழையான எடுகோள்களால்தான் நாடு அதல பாதாளத்துக்குச் செல்கின்றது. தனியார் மயப்படுத்துவது, ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்பது தொடர்பில் காத்திரமான விவாதங்கள் இச்சபையில் நடத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் நிலைப்பாடு என்பது அரசியல் நோக்கங்களுக்காக செய்யப்படுகின்ற எதிர்ப்புகளுக்கு அப்பால் நின்று ஒரு முடியாட்சியில் மன்னன் எடுக்கின்ற தீர்மானமாக எதிர்கால விஷனாக ஜனாதிபதி நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் நாட்டின் பொருளாதார மீட்சிபெற வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.




## இன்றைய நாளில்...

- ★ 1522 – பேர்டினண்ட் மகலனின் விக்டோரியா கப்பல் உயிர் தப்பிய 18 பேருடன் எஸ்பானியாவை வந்தடைந்து, முதன்முதலில் உலகைச் சுற்றி வந்த கப்பல் என்ற பெயரைப் பெற்றது.
- ★ 1803 – பிரித்தானிய அறிவியலாளர் ஜோன் டால்ட்டன் வெவ்வேறு மூலகங்களின் அணுக்களை வேறுபடுத்துவதற்கு சின்னங்களைப் பயன்படுத்த ஆரம்பித்தார்.
- ★ 1873 – இலங்கையில் புதிதாக வடமத்திய மாகாணம் அமைக்கப்பட்டு, மொத்தம் இலங்கையின் மாகாணங்கள் ஏழாக அதிகரிக்கப்பட்டது. ஜே.இ.டிக்சன் அதன் முதலாவது அரச அதிபர் ஆனார்.
- ★ 1901 – அமெரிக்க அரசுத்தலைவர் வில்லியம் மெக்கின்லி நியூயோர்க்கில் சுடப்பட்டுப் படுகாயமடைந்தார்.
- ★ 1930 – ஆர்ஜென்டினாவின் அரசுத்தலைவர் இப்போலிட்டோ இரிகோயென் இராணுவப் புரட்சியை அடுத்து பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- ★ 1946 – இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி டி.எஸ். சேனநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- ★ 1951 – தினமலர் நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டது.
- ★ 1966 – தென்னாபிரிக்காவின் இனவொதுக்கலின் காரணகர்த்தா பிரதமர் என்ட்றிக் வெர்வோர்ட் கேப் டவுன் நகரில் குத்திக் கொல்லப்பட்டார்.
- ★ 1990 – யாழ்ப்பாணக் கோட்டை மீதான புலிகளின் முற்றுகையின் போது இலங்கையின் குண்டுவீச்சு விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
- ★ 1997 – வேல்ஸ் இளவரசி டயானாவின் உடல் லண்டனில் அடக்கம் செய்யப்பட்டது. 2.5 பில்லியன் மக்கள் தொலைக்காட்சி மூலம் இந்நிகழ்வைப் பார்த்தனர்.

# பொதுமக்களை கைதுசெய்தல் - ஒடுக்குமுறை என்பவற்றுக்கு ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனம் கடும் கண்டனம்

நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு சவால் விடுக்கும் வகையில் அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்டு குரல் எழுப்பிய பொதுமக்களை கைதுசெய்தல் மற்றும் அவர்கள்மீது ஒடுக்குமுறைகளை மேற்கொள்வதை வன்மையாக கண்டிப்பதாக ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும், எந்தவொரு சூழ்நிலையிலும் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் சொந்தமான பொதுச் சொத்துகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பிலும் அந்த நிறுவனம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்த நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஊழலற்ற நாட்டை உருவாக்கும் நோக்குடன் குரலெழுப்பிய பொதுமக்களை தன்னிச்சையாகவும் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றிய நிலையிலும் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏனைய சட்ட ஏற்பாடுகளை தவறாக பயன்படுத்துவதை உன்னிப்பாக அவதானிக்கிறது.

சட்டத்தின் இத்தகைய தன்னிச்சையான பிரயோகமானது பொதுமக்கள் தமது ஜனநாயக உரிமைகளை பின்பற்ற தயக்கம் காட்டும் நிலைமையினை உருவாக்கும் அதே வேளை, இவை நாட்டிற்கு மோசமான விளைவுகளை உருவாக்கவும் வழி வகுக்கும். நாட்டின் அரசியலமைப்பின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடலுக்கான சுதந்திரம் ஆகியவற்றை புறக்கணித்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் தற்காலிக ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற கைதுகள் மற்றும் விசாரணைகளூடாக நாட்டு மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய நிறைவேற்றதிகாரம் மற்றும் அரச அதிகாரங்கள் என்பன துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக கருதப்படலாம்.

சட்டத்தின் பார்வையில் ஒவ்வொரு குடிமகனும் சமமானவர்களே. ஆகவே, அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகளை அடக்கும் ஆயுதமாக சட்டத்தினை பயன்படுத்தக்கூடாது. எவ்வாறாயினும், இன்றைய காலகட்டத்தில் பாரியளவான ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சுதந்திரமாக நடமாடும் அதேவேளை, ஏனையவர்கள் மீது பயங்கரவாத தடுப்புச்சட்டங்களின் முழு வலிமையையும் பிரயோகிக்கப்படுகின்றபோது சட்டத்தின் பயன்பாடானது மக்களிடையே சமமாக நிலைநாட்டப்படவில்லை என்பதை விளங்கிக்கொள்ளலாம்.

சட்டத்தின் முன் அனைத்து குடிமக்களும் சமமானவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதில் நிறைவேற்று அதிகாரத்தில் இருப்போர் பொறுப்புக் கூறவேண்டும்.

ஊழலை ஒழித்து உண்மையான முறைமை மாற்றத்தினை உருவாக்கும் நோக்குடன் சட்ட வரம்பெல்லைகளுக்குள் உட்பட்டு, குரல் எழுப்பிய பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களுடன் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனம் கைகோர்க்கிறது. தடுப்புக்காவல் உத்தரவுகளை இரத்துசெய்து,

பொதுமக்கள் தமது அடிப்படை உரிமைகளை பழிவாங்கல்களுக்கு அஞ்சாமல் சுதந்திரமாக அணுகக்கூடிய ஒரு ஜனநாயகமான சமூகத்தை கட்டியெழுப்பத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தினை கேட்டுக்கொள்வதாக அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## 05.09.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 13 6 70 | 141 4251 |
| கனேடியன் டொலர் | 158 8800 | 171 6331 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 6131 | 42 7480 |
| யூரோ | 241 5757 | 256 7425 |
| ஜப்பான் யென் | 1 4256 | 1 5320 |
| சிங்கப்பூர் டொலர் | 142 0438 | 153 816 |
| ஸ்ரேலிங் பவுன் | 3 7 4011 | 314 1 44 |
| சுவிஸ் பிராங்க் | 250 2142 | 267 3762 |
| ஐ.அ.டொலர் | 247 445 | 258 17 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 847 6041 |
| குவைட் | குவைட் தினார் | 0,060 8678 |
| ஓமான் | ஓமான் றியால் | 827 708 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 2882 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0384 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 3 35 |

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ஆதரவாக லண்டனில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு






(வவுனியா செய்தியாளர்)

காணாமல்போனோர் தினத்தை முன்னிட்டு தாயகத்தில் தாய்மாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் 2000 ஆம் நாளை கடந்துள்ள நிலையில், அதற்கு ஆதரவு தெரிவித்தும் காணாமல் போனோர் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக் கூற வலியுறுத்தியும் புலம்பெயர் தமிழின செயற்பாட்டாளர்களால் போராட்டமொடான்று லண்டனில் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் ஆதரவுடன் குறித்த ஆர்ப்பாட்டம் லண்டனில் இடம்பெற்றது.

யுத்தம் இடம்பெற்றபோதும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் பலர் காணாமல்போயிருந்தனர். பலர் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையில் இன்றுவரை அவர்களுக்கு என்ன நடந்தது என தெரியாது அவர்களது உறவுகள் தினம் தினம் செத்துக் கொண்டிருக்கின்றார்கள். காணாமலாக்கப்பட் டவர்களுக்கு நடந்தது என்ன என நீதி கோரி தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள் 2000ஆம் நாளை கடந்துள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் பொறுப்புக் கூற வேண்டும் என வலியுறுத்தியே இவ்வார்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் காணாமல்போனோர் பற்றிய ஆரோக்கியமான நம்பகத்தன்மையுடைய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. இது குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானியா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கைதுகள், மனித உரிமை மீறல்கள், நில அபகரிப்பு, தமிழ்ப் பிரதேசங்கள் சிங்கள மயமாக்கப்படல் ஆகியவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தனர். மேலும், குறித்த ஆர்ப்பாட்டத்தின்போது தமிழர் பாரம்பரிய பறை இசையும் இடம்பெற்றிருந்தது.

# பிபிலையில் கார் விபத்து: மகன் பலி; தந்தை படுகாயம்

(பதுளை செய்தியாளர்)

பிபிலை பகுதியில் நேற்று முன்தினம் இரவு கார் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதியதில் மகன் உயிரிழந்ததுடன், தந்தை படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் 18 வயதுடைய மாணவர் உயிரிழந்துள்ளதாக பிபிலை வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரவுவேளையில், யானையை பார்த்ததும் பீதியடைந்து, வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதே விபத்துக்குக் காரணமென பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவனின் தந்தை ஓர் ஆசிரியர் என்பதுடன், அவர் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பிபிலையிலிருந்து பதியத்தலாவையில் உள்ள வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்த மாணவன் பிபிலை வெல்லஸ்ஸ தேசிய பாடசாலையில் தரம் -12இல் கல்வி பயின்று வந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபிலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மூன்று பாடசாலைகளின் மாணவர்களுக்கு தர்கா நகரில் புலமைப்பரிசில் பரீட்சை கருத்தரங்கு



(பீ.எம். முக்தார்)



தர்கா நகர் ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை, அல்-ஹம்ரா மகா வித்தியாலயம் மற்றும் அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளிலிருந்து இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள சுமார் 335இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு 3ஆம் திகதி தர்கா நகர் லோட்டஸ் வீதியிலுள்ள தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் ஆரம்பமானது.

முதல்நாள் கருத்தரங்களில் அல்-ஹம்ரா மகா வித்தியாலய மாணவர்கள் கலந்துகொண்டனர். தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் ஏற்பாடு செய்த இக்கருத்தரங்கில் அநுராதபுரம் ஸாஹிரா கல்லூரி ஆசிரியர் முஹம்மத் ரனீஸ் வளவாளராக கலந்துகொண்டார்.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றி ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் 3 பாடசாலைகளைச் சேர்ந்த 3 மாணவர்கள் பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக கல்வி நிலையத்தின் ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் அபூதாபியிலிருந்து அறிவித்தார்.

மேற்படி கல்வி நிலையத்தின் ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் ஆலோசனைக்கு அமைய இக்கருத்தரங்கு இடம்பெறுவதோடு, ஆரம்ப நிகழ்வில் அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான ஏ.ஜே.எம்.அக்பர், ஏ.எம்.எம். லியாஸ், களுத்துறை மாவட்ட இளம் எழுத்தாளர் சங்க செயலாளரும் சமூக சேவையாளருமான எம்.பாஸி சுபைர் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தரம் 5 பொறுப்பாசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# கோதுமை மா விலை அதிகரிக்கப்படவில்லை!

## நிர்ணயத்துக்கேற்ப விற்பனை செய்யாவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

கோதுமை மா விலை அதிகரிப்பதற்கு எந்த அடிப்படைக் காரணமும் இல்லையென வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதன் காரணமாக கோதுமை மா இருந்த விலையிலேயே விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற தெரிவித்துள்ள அமைச்சர், அவ்வாறு இல்லாவிட்டால் நுகர்வோர் அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜா-எல பிரதேசத்தில் அமைந்துள்ள அவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (04) இடம்பெற்ற ஊடகவிலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு கோதுமை மா உற்பத்தி நிறுவனங்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஒரு மாதத்துக்கு தேவையான கோதுமை மாவை தயாரிப்பதற்காக தேவையானளவு கோதுமை தம்மிடம் இருப்பதாக தெரிவித்தனர். துருக்கி மற்றும் டுபாய் ஆகிய நாடுகளிடம் விலை மனுகோரப்பட்டுள்ளது.



கோதுமை தொகை இம்மாதம் 15ஆம் திகதியாகும்போது நாட்டை வந்தடையுமென இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

அதன் காரணமாக எதிர்காலத்தில் கோதுமைக்கு தட்டுப்பாடு ஏற்படாது. இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா உற்பத்தியின்போது ஏற்படும் செலவு அதிகரிப்பு அல்லது மேலதிக செலவுகள் சேர்க்கப்படவில்லை. கோதுமைக்கு தட்டுப்பாடு ஏற்படுமாக இருந்தால் மாத்திரம் விலை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இல்லை.

# வெளிநாட்டிலிருந்து வந்த மனைவியை கழுத்தறுத்துக் கொலை செய்த கணவர்

## தம்புள்ளையில் சம்பவம்

தம்புள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டவெல பிரதேசத்தில் கணவரால் மனைவி கழுத்தறுத்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொட்டவெல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான கீதா குமாரி கருணாதிலக்க என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் கடந்த 31ஆம் திகதி வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பி தாய் வீட்டில் இருந்தபோது கணவரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இருவருக்குமிடையில் நீண்டகாலமாக நிலவி வந்த குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.சடலம் மீதான சட்ட வைத்திய அதிகாரியின் விசாரணை நேற்று இடம்பெற்றது.

கொலையைச் செய்த சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆண்டிமுனை முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து முன்னேஸ்வரம் நோக்கி பாத யாத்திரை ஆரம்பம்





(உடப்பு செய்தியாளர்)

உடப்பு இந்து நெறிக்கழகம், ஸ்ரீபார்த்தசாரதி பஜனைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட முன்னேஸ்வரம் பாத யாத்திரை நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஆண்டிமுனை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

இந்த பாதயாத்திரை 20ஆவது வருடத்தை இவ்வருடம் பூர்த்திசெய்துள்ளது. பாதயாத்திரையாக செல்லும்போது பக்தர்கள் இடையில் மானாவரி சிவன்கோவில், ராஜகதழுவ ஆலையடி பிள்ளையார் ஆலயம், தெதுருஓயா ஐயனார் ஆலயம், திமிலை கண்ணகி அம்மன் ஆலயம், சிலாபம் சித்தர்மடம் ஆலயம், சிலாபம் முத்துமாரியம்மன் ஆலயம் ஆகிய வற்றுக்குச் சென்று இறுதியாக முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி ஆலயத்தை அடைவார்கள்.

முன்னேஸ் வரத்தில் இடம்பெறும் தீமிதிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு பாதயாத்திரையை நிறைவு செய்வார்கள்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

சிறு விளம்பரம்

ஜோதிடம்

உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒரு முறை என்னை தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிரித்தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, காதல், கணவன், மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்துவிட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு. நினைத்தது நினைத்தபடி. உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப் புகழ்பெற்ற மலையாள மாந்திரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி 071 0192687 www.facebook.com / Srimath suwamiji

# தம்பலகாமத்தில் சிறுபோக வேளாண்மை அறுவடை



## பசளையின்மையால் விளைச்சல் குறைவென விவசாயிகள் கவலை



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 256 விவசாயக் கண்டம் வெம்புக் கொலனியைச் சேர்ந்த விவசாயிகள் சிறுபோக வேளாண்மை அறுவடையை தற்பொழுது மேற்கொண்டு வருகின்றனர்.

400இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் இக்கண்டத்தில் இச்சிறுபோக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இச்சிறுபோகத்தில் பசளை, கிருமிநாசினி கிடைக்காததனால் விளைச்சல் குறைவாகக் கிடைத்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு ஏக்கருக்கு 12-15 பேக் மட்டில் விளைந்திருப்பதாக தெரிவிக்கின்றனர். பசளை, கிருமிநாசினி யூரியா முதலான விவசாயத்துக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் கிடைத்ததனால் 50இற்கும் மேற்பட்ட மூடைகள் ஒரு ஏக்கருக்கு கிடைத்தன.

ஆனால், இச்சிறுபோகத்தில் அவ்வாறு கிடைக்கவில்லை, இதற்குக் காரணம் உரிய முறையில் பசளை, கிருமிநாசினி யூரியா கிடைக்காததன் காரணமாக குறைவாகவே விளைச்சல் காணப்பட்டது

அத்துடன், அறுவடை கூலியும் அதிகம் 20,000 - 21, 000 ரூபா வரை அறுவடைக்கு எடுக்கின்றனர். அறுவடை இயந்திரத்திற்கான டீசல் எடுப்பது கஷ்டம் எனவும் குறிப்பிடுகின்றனர்.

இதனால் இம்முறை நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். எனினும், அடுத்த போகத்திற்காவது நேர காலத்துடன் பசளை, யூரியா கிருமிநாசினிகளை தந்துதுதவுமாறு விவசாயிகள் கேட்கின்றனர்.

மூன்று ஏக்கருக்கு முன்னர் 100 - 150 மூடைகள் விளையும், இப்பொழுது மூன்று ஏக்கருக்கு 50 மூடைகள் விளைவதும் குறைவு. முன்னர் ஒரு ஏக்கருக்கு 30 மூடைகள் விளைந்ததுபோல் இப்பொழுது சிறுபோகத்தில் 10-12 மூடைகளே விளைகின்றன.

பசளை கிருமிநாசினி யூரியா தந்திருந்தால் இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காது எனவும் மேலும் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கில் ரூ.10 கோடி செலவில் அமைக்கப்பட்ட மூன்று மாடி பாடசாலை கட்டடம் திறந்துவைப்பு





(நூருள் ஹுதா உமர்)

மட்டக்களப்பு மத்தி வலயத்திற்குட்பட்ட காத்தான்குடி கல்விக்கோட்டத்தின் மீரா பாலிஹா மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மூன்று மாடி கட்டடம் நேற்று (05) காலை திறந்துவைக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் யூ.எல்.மன்சூர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக பங்கேற்று கட்டடத்தை திறந்துவைத்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ்.உமர் மௌலானா, காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள், முக்கியத்தர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சகல துறைகளிலும் உயர் சித்தியடைந்த மாணவிகள் கௌரவிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின்போது கட்டடத்தை அமைப்பதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படமை குறிப்பிடத்தக்கது.

# வீதியில் பயணித்த மோட்டார்சைக்கிள் திடீரென தீப்பற்றி எரிந்து நாசம்



## திருமலையில் சம்பவம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - ஹொரவப்பொத்தான பிரதான வீதி மிரிஸ்வெவ பகுதியால் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார்சைக்கிளொன்று திடீரென தீப்பற்றியுள்ளது.

நேற்று (05) காலை கணவன், மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் உறவினர்களின் வீட்டுக்கு வவுனியா சென்றுகொண்டிருந்தபோது இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதில் திருகோணமலை அன்புவெளிபுரம், அண்ணா வீதியில் வசித்துவரும் கிரீஸ்கந்ததேவன் சஞ்சீவதரன (32 வயது) என்பவருடைய மோட்டார்சைக்கிளே தீப்பற்றியதாகவும் தெரிய வருகின்றது.

குறித்த அனர்த்தம் தொடர்பில் மொரவெவ பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார்சைக்கிள் தீப்பற்றியதற்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை எனவும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டு. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தோட்டப் பயிர்ச்செய்கை







(வாழைச்சேனை நிருபர்)

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் அரச திணைணக்களங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் திட்டம் நாடளாவிய ரீதியில் பல்வேறு திணைக்களங்களில் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் தங்களது அலுவலக வளாகத்திற்குள் தோட்டப் பயிர்ச்செய்கையை திறம்பட மேற்கொண்டு வருகின்றது.

திணைக்களத்தின் தலைவர் ந.நாகரெட்ணம் தலைமையில் வெற்றிகரமான பயிர்ச்செய்கை பராமரிப்பு அலுவலக உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நடைபெற்று வருகின்றது.

இங்கு வாழை, பயத்தை, கீரை, வெண்டி, மஞ்சள், பொன்னாங்காணி, கத்தரி, மிளகாய், பப்பாசி, நோக்கிட், புடோல் போன்ற தாவரங்களை பயிரிடப்பட்டு அதன் அறுவடை செய்தவற்றையும் அலுவலக உத்தியோகத்தர்கள் பங்கீடுசெய்து பராமரித்து வருகின்றனர்.

# அட்டாளைச்சேனை ஷறப் விளையாட்டுக் கழகத்திற்கு சீருடை வழங்கிவைப்பு



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை ஷறப் விளையாட்டுக் கழகத்திற்கு சீருடை வழங்கும் நிகழ்வு தலைவர் எஸ்.எம்.றிஸ்வி அஹமட் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சீருடையை வழங்கியதுடன், அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஜ்வத் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## இந்தியாவுக்கு பதிலடி கொடுத்த பாகிஸ்தான்

# இந்திய அணியின் தலையெழுத்தை தீர்மானிக்கும் போட்டி இன்று இலங்கையுடன்








O ஆவது ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் கடந்த 27ஆம் திகதிமுதல் நடைபெற்றுவரும் நிலையில் சுப்பர் - 4 சுற்றில் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி இன்று டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி இந்திய அணியின் தலையெழுத்தை தீர்மானிக்கும் போட்டியாக அமைகிறது.

குறித்த போட்டியில் இந்திய அணி தோல்வியை தழுவும் பட்சத்தில் இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழக்கும். மாறாக, இலங்கை அணி இன்றைய போட்டியில் வெற்றிபெறும் பட்சத்தில் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும். இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தியிருந்தது.

இந்திய அணி தங்களது முதல் சுப்பர் 4 ஆட்டத்தில் நேற்று முன்தினம் டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பாகிஸ்தான் அணியை எதிர்கொண்டது. நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்ய, விராட் கோஹ்லியின் அரைசதத்தால் 20 ஓவரில் 181 ஓட்டங்களை இந்திய அணி குவித்தது.

182 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணி மொஹமட் நவாஸின் அதிரடி மற்றும் மொஹமட் றிஸ்வானின் நிதான துடுப்பாட்டம் என்பவற்றின் உதவியுடன் கடைசி ஓவரின் 5ஆவது பந்தில் இலக்கை அடித்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

# ட்விட்டரில் அதிகம் பதிவிட்ட செரீனாவுக்கு பாராட்டு



(ரமணி)

அமெரிக்க டென்னிஸ் ஜாம்பவான் செரீனா வில்லியம்ஸ் சமூக வலைத்தள வரலாற்றில் பெண் தடகள வீராங்கனைகளைப் பற்றி அதிகம் பதிவிட்டதாக ட்விட்டர் தெரிவித்துள்ளது. அமெரிக்க ஓபனுடன் வில்லியம்ஸ் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து எல்லா காலத்திலும் அதிக ட்வீட் செய்யப்பட்ட பெண் தடகள வீராங்கனை என்று ட்விட்டர் தெரிவித்துள்ளது.

ட்விட்டர் 2006இல் தொடங்கப்பட்டது. அந்த நேரத்தில் வில்லியம்ஸ் ஏற்கனவே ஏழு கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் கிரீடங்களையும், பெண்கள் இரட்டையர் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தையும் தனது சகோதரி வீனஸுடன் சிட்னி 2000இல் வென்றிருந்தார்.

கடந்த மாத தொடக்கத்திலிருந்து வெள்ளிவரை வில்லியம்ஸைப் பற்றி ட்வீட் செய்த பயனர்களில் 74 சதவீதம் பேர் ட்விட்டர் வழங்கிய ஒரு புள்ளிவிவரத்தில் ஆண்டு முழுவதும் அவரைப் பற்றி இடுகையிடவில்லை என்று அமெரிக்க ஒளிபரப்பாளரான என்.பி.சி. தெரிவித்துள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# வட மாகாண மல்யுத்தப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட ஆண், பெண் அணிகள் முதலிடம்




1 11ஆம் ஆண்டுக்கான மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் வட மாகாண மல்யுத்த போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு அணிகளும் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டன.

கடந்த சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்ற குறித்த மல்யுத்தப் போட்டியின் வெற்றிக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவர்கள் பெரும் பங்கு வகித்தனர். குறித்த போட்டியில் தங்கம் - 6, வெள்ளி - 2, வெண்கலம் - 6 பதக்கங்களைப் பெற்று முல்லைத்தீவு மாவட்ட ஆண்கள் அணி முதலாவது இடத்தை பெற்றுக்கொண்டுள்ளது.

அதேவேளை, தங்கம் - 9, வெள்ளி - 4 பதக்கங்களைப் பெற்று முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணியும் முதலாவது இடத்தைப் பிடித்தது. ஆண்கள் அணி தொடர்ச்சியாக 3 வருடங்கள் 1ஆம் இடத்தையும், பெண்கள் அணி தொடர்ச்சியாக 2 வருடங்கள் 1ஆம் இடத்தையும் தக்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போட்டித் தொடரில் தங்கம் 2, வெள்ளி 4, வெண்கலம் 6 பதக்கங்களைப் பெற்ற யாழ்ப்பாண ஆண்கள் அணி 2ஆம் இடத்தையும் மற்றும் தங்கம், வெள்ளி, வெண்கலம் 3 ஆகிய பதக்கங்களைப் பெற்ற வவுனியா 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. பெண்கள் பிரிவில் தங்கம் 1, வெள்ளி 1, வெண்கலம் 1 ஆகிய பதக்கங்களைப் பெற்று வவுனியா மாவட்டம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

## போடியார் புலம்பல்!




13ஆம் திருத்தம் முழுமையாக அமுலாக்க வேணுமாம் எண்டு வீணா கட்சி அமைச்சர் டக்லஸ் சொல்லுறாரு எலுவா?

மறுகா நீ உச்சரிக்கிற மத்தியில் கூத்தாச்சு மாநிலத்தில தனி ஆச்சி.. இத எப்படா தம்பி மறந்த .. ஒண்ட கதய பாத்த பாட்டி வட சுட்ட கத மாதிரி எலுவா இருக்கு. ஆரு ஆட்சிக்கு வந்தாலும் அமைச்சர் பதவியோட குடும்பம் நடத்திற ஒரே ஆள் நீ மட்டும்தான்டா..!

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

### கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவில்லை:

# வரலாறு தெரியாமல் வியாழேந்திரன் எம்.பி. நாடாளுமன்றில் பொய் சொல்வதாக முபாறக் அப்துல் மஜீத் சாடல்






கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்ற ஒன்று அரசாங்கத்தினால் உருவாக்கப்படாத நிலையில், கடந்த மூன்று தசாப்தங்களாக கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவில்லையென வியாழேந்திரன் எம்.பி. சொல்வதன் மூலம் இவர் வரலாறு தெரியாமல் நாடாளுமன்றத்தில் பொய் சொல்லியுள்ளாரென ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி தெரிவித்ததாவது,

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்ற பெயரில் சட்டப்படியான ஒரு செயலகம் இல்லவே இல்லை என்பது தெரியாத நாடாளுமன்ற உறுப்பினராக வியாழேந்திரன் இருக்கிறார்.

1989ஆம் ஆண்டு கல்முனை செயலகத்துக்கு உதவியாக ஓர் உப செயலகம்தான் உருவாக்கப்பட்டது. ஏற்கனவே கல்முனைக்கென தனியான செயலகம் இருக்கும் நிலையில், புதிய எல்லை இன்றி உப செயலகம் என்பதை தரமுயர்த்தி தனி செயலகமாக ஆக்கவேண்டும் என்ற கடப்பாடு அரசுக்கு இல்லை.

33 வருடமாக இயங்கும் கல்முனை உப செயலகத்துக்கு தமிழ் செயலகம் என்றோ, வடக்கு செயலகம் என்றோ அரசாங்கம் பெயர் வைக்கவில்லை. இப்பெயரை புலி ஆதரவு உப செயலக உறுப்பினர்கள் தமக்குத்தாமே வைத்துக்கொண்டார்கள்.

மேற்படி கல்முனை உப செயலகம், பிரதேச செயலகம் - தமிழ்ப் பிரிவு என சொல்லப்பட்ட நிலையில், 01.02.2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மேற்படி தமிழ்ப் பிரிவின் கடிதத்தில் இனி இப்பெயர் 'தமிழ்ப் பிரிவு' என்பதற்கு பதிலாக 2019.02.04 முதல் 'வடக்கு' என மாற்றம் செய்யப்படுகிறது என கல்முனை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி கல்முனை செயலகம் - வடக்கு பிரிவு என்ற பெயர் 2019ஆம் ஆண்டுமுதல் செயல்படுகிறது என்ற அர்த்தமே தவிர, 'கல்முனை வடக்கு செயலகம்' என்ற ஒன்று இல்லை என்பது நிரூபிக்கப்படுகிறது.

இந்த உண்மைகளை புரியாமல் ஒரு பொய்யை பல தடவைகள் சொன்னால் அது உண்மையானதாக தெரியும் என்பதற்கிணங்க வியாழேந்திரன் தமிழ் மக்களுக்கு பொய் சொல்லி ஏமாற்றுகிறார். இந்த பொய்யையெல்லாம் கேட்டுக்கொண்டு இஞ்சி தின்ற குரங்கு போன்று இருக்கிறார்கள் முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவற்றின் தலைவர்களும்.

இந்த ஊமைகளுக்கெதிராக கோஷம் எழுப்ப முடியாத கோழைகளாக கல்முனை முஸ்லிம்கள் உள்ளனரா? என கேள்வியெழுப்பியுள்ளார்.

## மீராவோடை அல்-ஹிதாயாவில் 25 மாணவர்கள் பல்கலைக்குத் தகுதி



(மீராவோடை நிருபர்)

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின்படி கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட மீராவோடை அல்-ஹிதாயா தேசிய பாடசாலையிலிருந்து 25 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல தகுதி பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் கே.எல்.எம்.சபாஹிர் தெரிவித்தார்.

அந்தவகையில், கணித விஞ்ஞானத் துறையில் 13 மாணவர்களும், கலை, வர்த்தகத் துறையில் 12 மாணவர்களும் அடங்கலாக மொத்தமாக 25 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல தகுதி பெற்றுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

சிறந்த பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்களுக்கும் தனது சேவைக் காலத்தில் வழிகாட்டிய, மரணமடைந்த பாடசாலையின் முன்னாள் அதிபர் யூ.எல்.எம்.புஹாரி மற்றும் தற்போதைய அதிபர் கே.எல்.எம்.சபாஹிர், கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் பாடசாலை நலன்விரும்பிகள் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

# கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு கோரி 100 நாள் செயல்முனைவு 35ஆவது நாளாக தம்பலகாமத்தில்








(கிண்ணியா நிருபர்)

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில், "வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாள் செயல்முனைவின் 35ஆவது நாள் போராட்டம் நேற்று முன்தினம் (04) திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசத்தின் சிவசக்திபுரம் கிராமத்தில் வயல்வெளிகள் சூழ்ந்த சேனாவள்ளி குளத்திற்கு அருகில் இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் தம்பலகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள், விவசாயிகள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், மீனவ மற்றும் விவசாய சங்கத்தினர், செயற்பாட்டாளர் என 70இற்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனக்கோரி நடைபவனியாக வருகைதந்து சேனாவள்ளிக்குளக் கட்டில் கூடியிருந்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

தமிழ் அரசியல்வாதிகளே ஒன்று சேருங்கள், எமது காணி எமது உரிமை, கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் போன்ற பதாகைகளை ஏந்தியவாறும் மாட்டு வண்டியிலும் பேரணியாக சென்று தங்களது அமைதியான போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அரசியல்வாதிகள் தங்களுக்கான உரிமைகளை பெற்றுத்தர வேண்டும், சிறுபான்மை சமூகத்திற்கான தீர்வை முன்வைக்கவேண்டும், எங்களது உரிமைகளை பெற்றுத்தாருங்கள், பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பல இன்னல்களை எதிர்நோக்குகிறோம், இதற்கான தீர்வை பெற்றுத்தாருங்கள், விவசாய பூமியாக தம்பலகாமம் காணப்படுகிறது, இனிமேலாவது இயற்கை உரம் கிருமி நாசினியை இலகுவாக பெற்றுத்தாருங்கள், விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர்கள் எனவும் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஊடாக அரசாங்கத்திடம் கோரிக்கையை முன்வைக்கிறோம் - என்றனர்.

# ஓட்டமாவடி மத்திய கல்லூரியில் 24 மாணவர்கள் பல்கலைக்குத் தெரிவு

(கல்குடா நிருபர்)

இம்முறை வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சாதனை படைத்துள்ளதாக பாடசாலை முதல்வர் அல்ஹாஜ் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் தெரிவித்தார்.

அந்தவகையில் பொறியல் தொழில்நுட்பப் பிரிவில் எஸ்.ஐ.எம்.ஹம்சாத் எனும் மாணவன் 2ஏ பி சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பிரிவில் எம்.என்.எவ்.மில்பரா 2ஏ பி சித்தியோடு மாவட்ட மட்டத்தில் 4ஆம் இடத்தையும், ஜே.ஏ.பி.சாரனா 2ஏ பி சித்தியோடு மாவட்ட மட்டத்தில் 05ஆம் இடத்தையும் பெற்று பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஏ.ஹம்சத் சஹி எனும் மாணவி மாவட்ட மட்டத்தில் 5ஆம் இடத்தைப் பெற்று மருத்துவத்துறைக்கு தெரிவாகியுள்ளார்.

பாடசாலை பெறுபேற்றின் அடிப்படையின் மருத்துவத்துறைக்கு 04 மாணவர்களும், பொறியியல்துறைக்கு 03 மாணவர்களும், பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் 06 மாணவர்களும், உயிர் முறைமை தொழில்நுட்பப் பிரிவில் 07 மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர், அத்துடன், கலைத்துறையில் 03 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளதோடு, வர்த்தகத்துறைக்கு 01 மாணவரும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர் - என பாடசாலை முதல்வர் அல்ஹாஜ்எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் தெரிவித்தார்.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 57 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளதோடு, 131 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத் தகையைப் பெற்றுள்ளனர். இது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 70 வீதம் அடைவாகும்.

சாதனை படைத்த மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த பாடசாலை முதல்வர் அல்ஹாஜ் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக், அனைத்துப் பிரிவுகளின் பகுதித் தலைவர்கள், கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுகளும் நன்றிகளையும் கல்வியலாளர்கள் தெரிவித்தனர்.

# 156ஆவது பொலிஸ் தினத்தில் சம்மாந்துறையில் விசேட நிகழ்வுகள்

**உயிர்நீத்த பொலிஸாரின் குடும்பத்தினருக்கு கௌரவம்**



(சம்மாந்துறை நிருபர்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த கால யுத்தம் உள்ளிட்ட இதர காரணங்களினால் மரணமடைந்த பொலிஸாரின் குடும்பங்களுக்கு கௌரவம் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (03) சம்மாந்துறை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். நிகழ்வின் ஆரம்பமாக உயிர்நீத்த பொலிஸாருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வின் கடந்தகால யுத்தம் உள்ளிட்ட இதர காரணங்களினால் மரணமடைந்த சம்மாந்துறையைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பங்கள் கௌரவிக்கப்பட்டதுடன், பாடசாலைகள் முடிவடைந்த பிறகு வீதி ஒழுங்குகளை ஏற்பாடுசெய்ய மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் எம்.எச்.எம்.நவாஸ் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டதுடன், கப்சோ நிறுவனத்தின் பணிப்பாளர் காமில் இம்டாட், மல்வத்தை விவசாய விரிவாக்கல் பிரிவு பொறுப்பதிகாரி எம்.டி.அ கரீம், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகள், சம்மாந்துறை மஜ்லிஷ் அஷ்ஷூரா பிரதிநிதிகள், சம்மாந்துறை உலமா சபை பிரதிநிதிகள், அதிபர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# 'கரம் கொடுப்போம்' வேலைத்திட்டத்தின்கீழ் இறக்காமம் கர்ப்பிணித்தாய்மாருக்கு உதவிகள்

(மாளிகைக்காடு நிருபர்)



இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் 'கரம் கொடுப்போம்' நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் சேவை நாடிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

'கரம் கொடுப்போம்' வேலைத்திட்டமானது, தன்னார்வ தனவந்தவர்களின் நிதிப் பங்களிப்போடு பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பிரசவத்திற்கு தேவையான பொருட்களும் மருத்துவச் செலவுக்கான காசோலையும் இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல் தலைமையில் வழங்கப்பட்டன.

பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படும் இந்த 'கரம் கொடுப்போம்' நிகழ்வில் பிரிவில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# திருமலை மாவட்ட இளைஞர்களுக்கான வதிவிடப் பயிற்சிநெறி

(அப்துல்சலாம் யாசீம்)

மாற்றத்திற்கான இளைஞர்கள் எனும் தொனிப்பொருளில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அகம் மனிதாபிமான வள நிலையம் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வரும் "இளைஞர்களின் ஊடாக சமாதானத்தினை ஏற்படுத்தல்" எனும் திட்டத்தின்கீழ் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் முரண்பாடுகளை தீர்க்கும் தந்திரோபாயம் தொடர்பான வதிவிடப் பயிற்சியின் ஆரம்ப வைபவம் கடந்த சனிக்கிழமை (03) திருகோணமலை மாவட்டத்திலுள்ள சர்வோதயம் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இதேபோன்றதொரு வதிவிடப் பயிற்சியானது கடந்த ஆவணி 12 மற்றும் 13ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள





46 தமிழ்மொழிமூல இளைஞர்களுக்கு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பயிற்சி செயலமர்வானது திருகோணமலை மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகப்பிரிவின்கீழ் உள்ள மூவின இளைஞர்கள் 45 பேரை ஒன்றிணைத்து நடத்தப்பட்டு வருகின்றது. அத்துடன், வதிவிடப்பயிற்சி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆரம்ப நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி பணிப்பாளர் சின்னத்தம்பி ரவிகுமார் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டார். இந்நிகழ்வானது அகம் மனிதாபிமான வள நிலைய நிறுவனத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தங்களது ஆரம்ப உரையில், இன்று எமது சமூகத்திலுள்ளவர்கள் பலவகையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இவ்வாறு தங்களது சமூகத்தில் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உங்களைப்போன்ற இளைஞர்கள் கைகொடுத்து உதவவேண்டும் என்பதுடன், இன்று இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை என்பது ஓர் முக்கிய பிரச்சினையாகவும் சமூகத்தினை அழிவிற்கு கொண்டுசெல்லும் விடயமாகவும் இருப்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

எனவே, இளைஞர்களாகிய நீங்கள் எமது சமூகத்தின் முக்கிய பாத்திரம் என்பதால் சமூக செயற்பாட்டாளர்களாகவும், முன்மாதிரியானவர்களாகவும் திகழவேண்டும் எனவும் குறிப்பிட்டு சென்றனர்.

திகதி 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4868
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,667,280.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 8 8 7 1 9 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 46,586,167.60

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3110
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,581,600.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 30 52 74 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 74,117,215.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1323
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,262,980.00
வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 5 3 3 0 6 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,397,986.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 898
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,655,180.00
வெற்றி இலக்கினம் X வெற்றி இலக்கங்கள் 19 52 68 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,229,314.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 177
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,856,600.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 06 24 27 55 விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,506,918.40

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1216
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,848,220.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 268,746,118.00
E 20 43 51 72 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475
Email: info@nlb.lk Web: www.nlb.lk

# தமிழரசுக் கட்சி சுயேட்சையாக ஆட்களை களமிறக்கி பங்காளிக் கட்சிகளை தோற்கடிக்க வேண்டும்

## கலந்துரையாடலின்போது சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை உடைத்துக்கொண்டு, இலங்கை தமிழரசு வெளியேறி தனித்துப் போட்டியிட வேண்டும். அடுத்த தேர்தல்களில் பங்காளிக் கட்சிகளுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டாலும், அந்தத் தொகுதிகளில் தமிழரசுக் கட்சி சுயேட்சையாக ஆட்களை களமிறக்கி பங்காளிக்கட்சிகளை தோற்கடிக்க வேண்டும் - என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

எனினும், இது தவறான வழிநடத்தல் என இளம் உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், தொகுதிக்கிளையினருடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடந்தது.

இதன்போது, தமிழரசுக் கட்சியின் மாநாடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டு, தற்போது தமிழரசுக் கட்சி உறுப்பினராக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உரையாற்றியபோது,

எதிர்வரும் தேர்தல்களில் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும். அடுத்தடுத்த தேர்தல்களில் ரெலோ, புளொட் போன்ற பங்காளிக் கட்சிகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டால், அங்கு சுயேட்சை வேட்பாளர்களை களமிறக்கி அவர்களை நாம் தோற்கடிக்க வேண்டும்.

கிளிநொச்சியில் நான் அப்படி சுயேட்சை வேட்பாளர்களை களமிறக்கினேன். அதனால் 3 சபைகளை கட்டுப்படுத்துகிறேன். கிளிநொச்சியில் எவ்வளவு கட்டுப்பாடாக கட்சியை வைத்துள்ளேன். அதேபோல் ஏனைய இடங்களிலும் கட்சியை கட்டுப்பாடாக வைத்திருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கம் வகித்த நீதிபதியின் மகனான டொமினிக் ஒருமுறை, வென்றால் தலைவர், தோற்றால் தளபதிகள் என கூறியதற்காக உடனடியாக நீக்கப்பட்டார். எவ்வளவு பெரிய பொறுப்பிலிருந்தாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசியல் படிப்பதென்றால் கள்ளுத்தவறணைக்கு செல்ல வேண்டும். பிரதேச சபை உறுப்பினர்கள் ஊரில் நடக்கும் மங்கல, அமங்கல நிகழ்வுகளுக்கு செல்ல வேண்டும்.

ரெலோ தனித்து சென்று ஜனாதிபதியை சந்தித்துள்ளது. ஜனாதிபதிக்கு எம்மில் சிலர் வாக்களித்ததாக சொல்லப்படுகிறது. அதை அவர்களே வெளிப்படுத்துகிறார்கள். என்றாலும், அவர்கள் தனித்து சென்று சந்திப்பதை நாம் பிழை சொல்ல முடியாமல் உள்ளோம். ஏனெனில், சுமந்திரனும் அப்படித்தான் நடக்கிறார். எமது கட்சிக்காரரை கட்டுப்படுத்த முடியாத நாம், மற்ற கட்சிகளை எப்படி கேள்வி கேட்பது - என்றார்.

# புதிய வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் லியனகே பதவியேற்பு



*(கிளிநொச்சி நிருபர்)*

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவ நிர்வாகத்துறை விசேட வைத்திய நிபுணர் திலிப் லியனகே நேற்று (05) காலை பதவியேற்றுக்கொண்டார்.

அவர் பதவி ஏற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போது,

யுத்த சூழ்நிலையிலும் மீள்குடியேற்றத்தின் பின்னரும் வடக்கில் கடமையாற்றிய எனக்கு இந்த மாகாண மக்களின் உணர்வுகள் மற்றும் தேவைகள் நன்கு தெரியும். நாட்டுக்கு எப்போதும் முன்னுதாரணமாக விளங்கும் வடமாகாண சுகாதாரத்துறையை அனைவரின் உதவியுடன் மேலும் முன்னோக்கி எடுத்துச்செல்வதே எனது இலக்கு.

மக்களுக்காக எனது கடமையைச் செய்வதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன். அதற்காக சகல தரப்பினரது ஆசியையும் வேண்டுகிறேன் - என்றார்.

இதனிடையே, வடக்கில் மூன்று தகுதி வாய்ந்த மருத்துவ நிர்வாக அதிகாரிகள் இருந்தபோதிலும் தென்பகுதியில் இருந்து ஒருவரை நியமித்ததாக எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பில் சுகாதார அமைச்சின் கருத்தினை அறிய முற்பட்டபோது, "வடக்கில் மூவர் அல்ல, நால்வர் உள்ளனர். ஆனால், மாகாண சுகாதார அமைச்சிலிருந்து இவர்கள் நால்வரில் எவரையாவது நியமிக்குமாறு ஆளுநர் ஊடாகப் பரிந்துரைகள் எதுவும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களும் இப் பதவியைப் பொறுப்பேற்பதில் ஆர்வம் காட்டவில்லை" எனப் பதில் வழங்கப்பட்டது.

# தொண்டைமானாற்றின் குறுக்கே இரும்புக்கம்பியினாலான வேலி



*(யாழி. நிருபர்)*

யாழ்ப்பாணம் தொண்டைமானாற்றில் முதலைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதனால் ஆற்றின் குறுக்கே இரும்பு கம்பியினாலான வேலி அமைக்கப்பட்டுள்ளது.

தொண்டமணாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்திர மகோற்சவம் தற்போது நடைபெற்று வருகின்றது. அதில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும், வெளிமாவட்டங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் பலர் கலந்து சந்நிதி முருகனை வழிபட்டு வருகின்றனர்.

ஆலயத்திற்கு வருவோரில் பெரும்பாலானோர் தொண்டைமானாற்றில் நீராடியே முருகனை வழிபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஆற்றில் முதலைகளின் நடமாட்டம் காணப்பட்டமையால் அதில் நீராடுபவர்களை அவதானமாக நீராடுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ள நிலையில், தற்போது ஆற்றின் குறுக்காக இரும்புக் கம்பியினாலான வேலியை அமைத்துள்ளனர்.

வேலி அமைக்கப்பட்டுள்ளமையால் முதலைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியுள்ளதாகவும், முதலைகளை ஆற்றிலிருந்து வெளியேற்ற பல தரப்புடனும் பேச்சுகளை நடத்தி வருவதாகவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# வவுனியா இராசேந்திரங்குளம் மயானத்தின் அபிவிருத்திப் பணியின்போது குழப்ப நிலை

*(வவுனியா நிருபர்)*



வவுனியா, இராசேந்திரங்குளம் மயானத்தை தூய்மைப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டபோது அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது.

வவுனியா, இராசேந்திரங்குளம் மயானத்தின் ஒரு பகுதியில் கிறிஸ்தவர்களின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு பகுதியில் இந்துக்களின் உடல் தகனம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், பிரதேச சபையின் அனுமதி பெற்று குறித்த மயானத்தை தனிநபர் ஒருவரின் நிதிப் பங்களிப்பில் தூய்மைப்படுத்தி சுற்றிவர நிழல் மரங்கள் நாட்டி, தகன கொட்டகை மற்றும் நீர்த் தாங்கி என்பவற்றை நிர்மாணிப்பதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறித்த மயானத்தை உழவு இயந்திரம் மூலம் துப்பரவு செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது நீண்ட காலத்திற்கு முன் கிறிஸ்தவர்களின் உடல் புதைக்கப்பட்டு அடையாளமின்றி காணப்பட்ட சில இடங்களும் உழவு இயந்திரம் மூலம் சுத்தம் செய்யப்பட்டிருந்தது.

அங்கு வந்த கிறிஸ்தவ மதகுரு ஒருவரும், கிறிஸ்தவ மக்களும் தமது உறவினர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், சுத்தம் செய்தமையால் அவற்றின் இடங்களை கண்டுபிடிக்க முடியவில்லை என தெரிவித்தும் அங்கு நின்ற அபிவிருத்தி உத்தியோகத்தருடன் முரண்பட்டனர். அவர் நிலமையை மக்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தார்.

இருப்பினும், அதனை ஏற்க மறுத்த கிறிஸ்தவ மதகுரு நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் குறித்த நடவடிக்கைக்கு எதிராக மக்களை அழைத்துச் சென்று முறைப்பாடு பதிவு செய்தார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு உண்மை நிலையை அறிந்து அதனை கிறிஸ்தவ மக்களுக்கு தெளிவுபடுத்தியதுடன், கல்லறைகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை எனவும் உடல்கள் புதைக்கப்பட்டு அடையாளமின்றி இருந்தமையால் உழவு இயந்திரம் மூலம் சில இடங்கள் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மலசலகூடத்திலிருந்து எரிபொருள் மீட்பு

(மன்னார் நகர் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அலுவலகத்தின் மலசலகூடத்திலிருந்தும் பிரதேச செயலாளரின் விடுதி மலசலகூடத்திலிருந்தும் அண்மையில் எரிபொருள் மீட்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற நிலையில், இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரினால் மாங்குளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் குறித்த விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள பணிக்கப்பட்டிருந்தார்.

# மஸ்கெலியாவில் செஜேய பைனேன்ஸ் நிறுவனத்தால் கர்ப்பிணிகளுக்கு 5000 ரூபா வவுச்சர் வழங்கிவைப்பு

*(மஸ்கெலியா நிருபர்)*

மஸ்கெலியா சுகாதார அத்தியட்சகர் பிரிவிலுள்ள 549 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு உணவை பெற்றுகொள்ள 5 ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்கள் வழங்க இலங்கையிலுள்ள தனியார் பைனேன்ஸ் நிறுவனமான செஜேய நிறுவனம் முன்வந்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் மஸ்கெலியா சுகாதார அத்தியட்சகர் பிரிவிலுள்ள அவரது காரியாலயத்தில் முதற்கட்டமாக 100 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான போசாக்கு உணவுப் பொருட்களை, காகில்ஸ் ஊடாக பெற்றுக் கொள்ள தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர் வழங்கப்படவுள்ளதாக அந்த நிறுவனத்தின் டிக்கோயா கிளை முகாமையாளர் சசி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தத் திட்டத்தின் மூலம் 549 கர்ப்பிணித் தாய்மார்கள் நன்மை அடைவார்கள் என்றார்.





மண் சரிவு காரணமாக கண்டி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களை புதிதாக குடியமர்த்த கண்டி கங்கவட்டகோரளை பிரதேசம் மற்றும் பூஜாப்பிட்டிய பிரதேசங்களில் உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ள காணிகளைப் பார்வையிட தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகளுடன், கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தலைமையிலான குழு ஒன்று விஜயம் செய்தது. (கண்டி நிருபர்)

# நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சினால் அபிவிருத்திக் குழு நியமனம்





*(நுவரெலியா நிருபர்)*

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் 2022 முதல் 2025ஆம் ஆண்டு வரையிலான புதிய அபிவிருத்திக் குழு சுகாதார அமைச்சியினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் நிர்வாக சபையினருக்கான நியமனக் கடிதங்கள் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் மகேந்திர செனிவிரட்ன மற்றும் பிரதி பணிப்பாளர் திருமதி பாமினி நவரட்னம் ஆகியோரினால் நேற்றுமுன்தினம் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

தலைவர் பி. மகேஸ்வரன் (முன்னாள் நுவரெலியா ரோட்டரிக் கழக தலைவர்), செயலாளர் பிரியந்த (வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர்), பொருளாளர் என். நெடுமாறன் (முன்னாள் நுவரெலியா லயன்ஸ் கழகத் தலைவர்), உப தலைவர் ஜி.அப்துல் ரஹிம், இணைப்புச் செயலாளர் அல்ஹாஜ் சஹீர் ஹுசைன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

செயற்குழு உறுப்பினர்களாக எல்.ஜி.மஹிந்த சில்வா ( நுவரெலியா மாநகரசபை உறுப்பினர்) எ.எம்.பளீல் (முன்னாள் நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்) சமீந்த கொடிக்கார, நீலியன் யோகேன் உட்பட 21 உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன

# திட்டமிட்டே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்னை மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கியது

## மாத்தளை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் இம்ரான் அலி தெரிவிப்பு

(மாத்தளை நிருபர்)

நான் அரசியலில் கால் பதித்ததுமுதல் என்னை பதவி நீக்கும்வரை என்னை அரசியலிலிருந்து ஓரம்கட்ட மாத்தளை நகரில் ஒருசிலரின் திட்டமிட்ட செயலே என்னை மாத்தளை மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பதவி நீக்கம் செய்ததாக மாத்தளை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் இம்ரான் அலி தெரிவித்தார்.

தன்னை பதவி நீக்கம் செய்தது சம்பந்தமாக ஊடகத்துக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்:

கடந்த 2018ஆம் ஆண்டில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாத்தளை மாநகர சபைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட நான் முதலிடத்தை வகிக்கித்ததன் காரணமாக அன்றே கட்சியின் தலைமைப்பீடம் என்னை மாத்தளை மாநகர சபை உறுப்பினராக நியமனம் செய்தது. அன்று தொடக்கம் இன்றுவரை கட்சியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவனாக கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக செயல்படாமல் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு இணங்கி செயல்பட்டேன்.



இந்த காலகட்டத்துக்குள் சிலர் என்னை அரசியலிலிருந்து ஓரம் கட்ட திரைமறைவாக இருந்து செயல்பட்டு வந்தபோது அவர்களின் சவால்களுக்கு அஞ்சாது கடந்த நாலரை வருட காலமாக முகங்கொடுத்து வந்துள்ளேன்.

என்னை அரசியலிலிருந்து சதா ஓரங்கட்ட எண்ணியவர்களின் பொய்யான மற்றும் தவறான வதந்திகளை ஏற்றுக்கொண்டு என்னோடு முரண்பட்டுக்கொண்ட வேட்பாளர் லக்ஷ்மன் வசந்த பெரேரா என்னை அவரின் ஒரு அரசியல் கைப்பொம்மையாக நடத்திட முற்பட்ட போதெல்லாம் அதற்கு இணங்கிக்கொள்ளாத என்னை மாத்தளை மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கிட குறிவைத்த வண்ணம் செயல்பட்டார்.

2019 நாடாளுமன்றத் தேர்தலில் வக்ஷ்மன் வசந்த பெரேரா தோல்வி அடைந்ததும் என் மீதுள்ள கோபம் மேலும் அவருக்கு அதிகரித்தது. எனவே, அவரின் தேர்தல் தோல்விக்கு என்னுடன் மொத்தம் 16 உறுப்பினர்களுக்கு எதிராக நன்னடத்தை விசாரணைகள் நடத்த வேண்டும் என கட்சியின் தலைமைப்பீடத்துக்கு வலியுறுத்தி அதன் விளைவாக குற்றமற்ற என்னை பதவி நீக்கம் செய்துள்ளார்கள்.

அற்ப அரசியல் வாழ்வுக்காக எவரிடமும் மன்டியிட்டு செயல்பட வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்பதால் எனது பதவி நீக்கம் சம்பந்தமாக நீதிமன்றத்தின் உதவியை நாடியுள்ளேன் - என்றார்.

# பெருந்தோட்டங்களின் ஆபத்தில் சிக்கும் சிறுத்தைகளை பாதுகாப்பாக மீட்க உபகரணங்கள் வழங்கிவைப்பு

*(தலவாக்கலை நிருபர்)*



சிறுத்தைகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களிலிருந்து விலங்குகளை வெற்றிகரமாக மீட்பதற்காக மத்திய வனவிலங்கு வலயத்தின் வனஜீவராசி பாதுகாப்புத் திணைக்களங்களுக்கு மேலதிக உபகரணங்களை வழங்க வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஹக்கல, நல்லதண்ணிய மற்றும் கம்பளை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களங்களுக்கு இந்த மேலதிக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மலைகளில் வசிக்கும் சிறுத்தைகள் பொறிகளில் சிக்கிக்கொள்ளும்போதும் மற்றும் பிற ஆபத்துகளிலும் பாதிக்கப்படும்போதும் வனவிலங்கு அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெற்றிபெறும் வகையில் மத்திய வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகங்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டில் கடந்த எட்டு மாதங்களில் மனிதர்களின் பல்வேறு நடவடிக்கைகளால் ஐந்து சிறுத்தைகள் உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும்

## அரசாங்கத்தின் வருமானம் 14-15 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் வலியுறுத்து





பொருளாதார நெருக்கடியின்போது குறைந்த வருமானம் பெறுபவர்களே பிரதானமாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால், அவர்களைப் பாதுகாப்பதற்கு சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்காக நிதி ஒதுக்கப்பட வேண்டும் - என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் (கலாநிதி) நந்தலால் வீரசிங்ஹ தெரிவித்தார்.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்குப் பொருளாதார ரீதியான அசௌகரியங்கள் அதிகரித்தால் ஏழைகள் வீதிக்கு இறங்க நேரிடலாம் என்றும், இதனால் குழப்பமான சூழ்நிலை நாட்டில் ஏற்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே, அதிக வருமானம் பெறும் மற்றும் குறைந்த வருமானம் பெறும் இரண்டு தரப்பினர் மத்தியிலும் ஏற்படுகின்றன பொருளாதார அசௌகரியங்கள் பிரிந்து செல்வதற்கு வழி ஏற்படுத்தப்பட்டு, குறைந்த வருமானம் பெறுபவர்களின் அசௌகரியங்கள் கட்டுப்படுத்தப்பட்டு பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

"இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் எதிர்கால நோக்கு" என்ற தலைப்பில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த வாரம் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் விளக்கமளிக்கும்போதே மத்திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற விவாதங்களின்போது, நிதி தொடர்பான விடயங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயலூக்கப் பங்களிப்பை உறுதிப்படுத்தவும், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் எதிர்கால பொருளாதாரப் பாதை குறித்து பயனுள்ள கலந்துரையாடலை ஏற்படுத்தவும் நாடாளுமன்ற செயலகம் இந்தக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்திருந்தது.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடன் பெறுவது கட்டுப்படுத்தப்பட்டு அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். தற்பொழுது காணப்படும் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும். அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவீனங்களை நிர்வகிப்பதும் முக்கியமானதாகும்.

இறக்குமதியைக் கட்டுப்படுத்தியதன் ஊடாக கடந்த வருடத்தில் செலவீனத்தை 2 பில்லியன் ரூபா வரையிலும், இந்த வருடத்தில் 1.3 பில்லியன் ரூபா வரை குறைக்க முடிந்திருக்கின்றது. இதன் ஊடாக மருந்து, எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவுசெய்ய முடிந்தது.

விசேடமாக தற்பொழுது அரசாங்கத்தின் வருமானம் 1.2 பில்லியன் ரூபாவாக மாத்திரம் காணப்படுவதுடன், அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக அரசாங்கத்தின் செலவீனங்களைக் குறைக்க முடிந்தால் அரசாங்கத்தின் வருமானத்தில் சாதகமான முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

மேலும் இந்த நெருக்கடியை ஓரிரு மாதங்களில் தீர்க்க முடியாது, இருந்தபோதும் இவ்வருடம் டிசம்பர் மாதம்வரை இந்த நெருக்கடிகளைப் பொறுத்துக்கொள்ளவேண்டிய நிலைமை காணப்படுகிறது. அத்துடன், இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு அரசாங்கத்தின் வருமானம் 14-15 விகிதம் வரையில் அதிகரிக்கப்படவேண்டியது அவசியமாகும் - என்றார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியெல்ல உட்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

அத்துடன், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர உள்ளிட்ட நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

## மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான யோசனையை இம்மாத இறுதியில் அமைச்சரவையில் சமர்ப்பிக்க தீர்மானம்




மின்சார சபையை மறுசீரமைப்பு செய்வதற்கான யோசனைகள் இம்மாத இறுதியில் அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுமென மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான யோசனைகள் மற்றும் வேலைத்திட்டங்களை பெற்றுக்கொடுப்பதற்கு முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (05) அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர்,

அந்தக் குழுவுக்கு இதுவரையில் பல்வேறு அபிவிருத்தி நிறுவன பிரதிநிதிகள், தேசிய மற்றும் வெளிநாட்டு மின்சார துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினரிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகிய தரப்புகளுடன் அடுத்த வாரம் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இம்மாத இறுதியில் அந்த மறுசீரமைப்பு யோசனைகள் அமைச்சரவை அனுமதிக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பொது மனுக்கள் பற்றிய குழுவின் தலைவராக ஜகத் புஷ்பகுமார மீண்டும் நியமனம்





ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான பொது மனுக்கள் பற்றிய குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் புஷ்பகுமார மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

ஜகத் புஷ்பகுமாரவின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜயரத்ன முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வழிமொழிந்தார். அண்மையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவின் முதலாவது கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜகத் புஷ்பகுமார ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரிலும் பொது மனுக்கள் பற்றிய குழுவின் தலைவராக செயற்பட்டார்.

நாடாளுமன்றத்தின் 120(1) ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம், நாடாளுமன்ற தெரிவுக்குழுவினால் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு அண்மையில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

அதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாகிர் மாகார், பியங்கர ஜயரத்ன, திலிப் வெதஆரச்சி, வடிவேல் சுரேஷ், ச. வியாழேந்திரன், அசோக்க பிரியந்த, அ. அரவிந்த் குமார், திருமதி கீதா சமன்மலீ குமாரசிங்ஹ, பீ.வை.ஜீ.ரத்னசேக்கர, சாரதீ துஷ்மந்த, கோவிந்தன் கருணாகரம், ஜயந்த கெட்டகொட, மொஹமட் முஸம்மில், துஷார இந்துனில் அமரசேன, வேலு குமார், வருண லியனகே, யூ.கே. சுமித் உடுகும்புர, மாயாதுன்ன சிந்தக அமல், நிபுண ரணவக, காமினி வலேபொட, திருமதி ராஜிகா விக்கிரமசிங்ஹ, எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான ஆகியோர் பொது மனுக்கள் பற்றிய குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

## பல்கலைக்கழக புதிய கல்வியாண்டுக்கான விண்ணப்பம் கோரல் நடவடிக்கைகள் ஆரம்பம்

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் கோரும் நடவடிக்கைகள் எதிர்வரும் 23ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

2021-2022 கல்வி ஆண்டுகளுக்கான பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று (05) முதல் ஆரம்பமாகியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எதிர்வரும் 23ஆம் திகதிவரையில் விண்ணப்பிக்க முடியும். அதற்கமையை 2021-2022 கல்வியாண்டுக்காக 42 ஆயிரத்து 519 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர். பல்கலைக்கழக பிரவேசத்திற்கான பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள மாணவர் கைநூல் தற்போது நூல் விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக் கப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட விற்பனை முகவர்களின் பெயர்ப்பட்டியல் மும்மொழிகளிலும் நேற்று முன்தினம் (04) வெளியான பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பல்கலைக்கழக இணையத்தளத்தைப் பயன்படுத்த முடியும். ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின் 1919 அரசாங்க தகவல் கேந்திரத்துடன் தொடர்புகொள்ள முடியும். இந்த அதிகாரிகளுக்கு இது தொடர்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது - என சுட்டிக்காட்டியுள்ளார்.

## அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் வருடாந்த கூட்டமும் நூல் வெளியீடும்

(பேருவளை நிருபர்)


இத்திஹாத் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் வருடாந்த கூட்டமும் அதன் தலைவர் வைத்தியர் பஹ்மி இஸ்மாயில் எழுதிய "இலங்கை சாதுலியா தரீக்காவின் தகவல் தொகுப்பு" நூல் வெளியீடும் எதிர்வரும் 11ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் ஓட்கிட் அறையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கட்டார் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் தீன் முஹம்மட் இணையவழி மூலம் பிரதம சொற்பொழி வாற்றுளார். கௌரவ அதிதிகளாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்றாஹிம் அன்ஸார், பிரபல தொழிலதிபர்களான இல்லியாஸ் கரீம், ஹனீப் யூசுப் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், புத்திஜீவிகள், இத்திஹாத் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத் அமைப்பின் உறுப்பினர்கள், தரீக்காக்களின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## வாகன விபத்தில் ஒருவர் பலி; மூவர் காயம்!





(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், சாலியவெவ - 16 ஆம் கட்டை பகுதியில் நேற்று முன்தினம் (04) இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் காயமடைத்துள்ளனர்.

அநுராதபுரம், புத்தளம் ஊடாக கொழும்பு நோக்கிப் பயணம் செய்த தனியார் பஸ் ஒன்றும், புத்தளம் பகுதியிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த வேன் ஒன்றும் மோதியதால் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சாலியவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் வேனின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அந்த வேனில் சாரதிக்கு அருகில் இருந்து பயணம் செய்த மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

அத்துடன், குறித்த தனியார் பஸ்ஸில் பயணித்த மேலும் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தில் வேனின் முன் பக்கம் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், தனியார் பஸ்ஸின் முன் பக்கம் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் சாலியவெவ பொலிஸார் கூறினர்.

விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்கள் அங்கிருந்தவர்களால் சாலியாவெவ 17ஆம் கட்டை பகுதியிலுள்ள அளுத்கம கிராமிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துடன் தொடர்புடைய தனியார் பஸ் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாலியவெவ பொலிஸார் இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த கோர விபத்து அந்தப் பகுதியல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.





**கொழும்பு, ஸ்ரீ கதிரேசன் வீதி, அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ திருவிழா நேற்று (05) சுபவேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 13ஆம் திகதி சித்திரத்தேர் பவனியும், 14ஆம் திகதி பால்குட பவனியும் இடம்பெறவுள்ளன. நிகழ்வுகள் அனைத்தும் ஆலய ஆதீன கர்த்தா திருமதி மகேஸ்வரி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளன.**

**(படங்கள் எம்.நசார்)**

## 11 ஆம் மாடியிலிருந்து கீழே விழுந்து நபரொருவர் பலி

### வெள்ளவத்தையில் சம்பவம்

வெள்ளவத்தை, மாயா மாவத்தையிலுள்ள 11ஆவது மாடி கட்டட தொகுதியிலிருந்து கீழே விழுந்து நாபரொருவர் உயிரிழந்துள் ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

கிருலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் குறித்த கட்டடத்தில் 11ஆவது மாடியிலுள்ள ஜன்னல்களுக்கு அருகில் சுத்தம் செய்துகொண்டிருந்தபோது அதிலிருந்து கீழே விழுந்துள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மரண பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உலக செய்திகள்

## ஒபாமாவுக்கு ‘எம்மி’ விருது



நெஷனல் பார்க் தொடரை சிறப்பாக தொகுத்து வழங்கிய தற்காக அமெரிக்க முன்னாள் ஜனாதி பதி பராக் ஒபாமா வுக்கு எம்மி விருது வழங்கப்பட் டுள்ளது.

பராக் ஒபாமா, அவரது மனைவி மிஷேல் ஒபாமாவின் ‘ஹையர் கிரவுண்ட்’ தயாரிப்பு நிறுவனம் சார்பில் உருவான ‘Our Great National Parks’ ஆவணப் படம் கடந்த ஏப்ரலில் வெளியானது. ஐந்து பாகங்களைக் கொண்ட இந்தத் தொடர், உலக முழுவதுமுள்ள தேசிய பூங்காக்களின் சிறப்பம்சங்களை எடுத்துரைக்கும் வகையில் உருவாக்கப்பட்ட நிலையில், அதனை ஒபாமா தொகுத்து வழங்கினார்.

அதற்காக அவருக்கு சிறந்த தொகுப்பாள ருக்கான எம்மி விருது வழங்கப்பட்டது. இதேபோன்று புற்றுநோயால் உயிரிழந்த ப்ளெக் பாந்தர் படத்தின் கதாநாயகன் சாட்விக் போஸ்மேனுக்கு அறிவிக்கப்பட்ட எம்மி விருதை அவரது மனைவி பெற்றுக் கொண்டார்.

## காரைக்கால் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

### 14 பேர் படுகாயம்; ஒருவரின் நிலை கவலைக்கிடம்



இந்திய சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த காரைக்கால் மீனவர்களை துப்பாக்கி முனையில் சுற்றிவளைத்த இலங்கை கடற்படையினர் இரும்புக் குழாயால் தாக்கியதில், 15 மீனவர்கள் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் மீனவர் ஒருவரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காரைக்காலை அடுத்த காரைக்கால்மேடு மீனவ கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ராஜ்குமாரின் (வயது 43) விசைப்படகில், அவருடன் 15 மீனவர்கள் கடந்த 2ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரைக்கு தென்கிழக்கே இலங்கை - இந்திய சர்வதேச எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்துள்ளனர்.

அப்போது காரைக்கால் மீனவர்களின் படகை இலங்கை கடற்படை வீரர்கள் துப்பாக்கிமுனையில் சுற்றிவளைத்துள்ளனர். பின்னர், மீனவர்களின் படகில் ஏறி அதிலிருந்த விலை உயர்ந்த மீன்களை அள்ளி தங்களின் படகில் ஏற்ற முயன்றனர். அப்போது நியாயம் கேட்ட 15 மீனவர்களை மீன்கள் அள்ளப் பயன்படுத்தும் சவுள், இரும்பு ராடு, ரப்பர் குழாய் கொண்டு கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் ராஜ்குமாருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. ஏனைய 14 மீனவர்களும் இலங்கை கடற்படையினரின் தாக்குதலால் வலியில் கதறியுள்ளனர். தொடர்ந்து மீனவர்களின் படகிலிருந்து விலையுயர்ந்த மீன்கள், மீன்பிடி உபகரணங்கள், மீனவர்களின் கையிலிருந்த தங்க மோதிரம், நடுக்கடலில் படகின் இடத்தை அறியக்கூடிய ஜிபிஎஸ் கருவி ஆகியவற்றை பறித்துச் சென்றனர்.

இதன் மதிப்பு (இந்திய ரூபாப்படி) ரூ. 5 இலட்சம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து காரைக்கால்மேடு மீனவ பஞ்சாயத்தாருக்கும், மீன்வளத்துறை அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது. துறைமுகத்தை அடைந்ததும் அவர்களை காரைக்கால்மேடு மீனவர்கள் காரைக்கால் அரச பொது மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இதில் பலத்த காயமடைந்த ராஜ்குமாரின் உடல்நிலை மோசமானதால், மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரச மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் காரைக்கால், நாகப்பட்டினம் உள்ளிட்ட கடலோர மாவட்ட மீனவ கிராமங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மீனவ குடும்பத்தினர் கடும் அச்சத்திலுள்ளனர்.

## ‘நோர்ட் ஸ்ட்ரீம் ஒன்’ எரிவாயு குழாயை மூடும் ரஷ்யா

### ஐரோப்பிய நாடுகளில் எரிவாயு விலை மேலும் அதிகரிக்கும் அபாயம்

ரஷ்யாவிலிருந்து பொல்டிக் கடல் வழியாக ஜேர்மனிக்கு செல்லும் ‘நோர்ட் ஸ்ட்ரீம் ஒன்’ எரிவாயு குழாய் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய மசகு எண்ணெய்க்கு உச்ச விலை வரம்பை நிர்ணயிக்க ஜி7 நாடுகள் ஒப்புக்கொண்ட சில மணிநேரத்திலேயே இந்த அறிவிப்பை ரஷ்யா வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவிலிருந்து பொல்டிக் கடல் வழியாக ஜேர்மனிக்கு செல்லும் நோர்ட் ஸ்ட்ரீம் ஒன் எரிவாயு குழாய், பராமரிப்பு காரணங்களுக்காக முதலில் 3 நாட்கள் மூடப்படுவதாக அறிவித்த ரஷ்யா தற்போது எண்ணெய்க் கசிவால் காலவரையின்றி மூடப்போவதாக அறிவித்துள்ளது.

ஏற்கனவே, எரிவாயு விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியாமல் ஐரோப்பிய நாடுகள் திணறி வருகின்றன. குளிர்காலம் நெருங்கிவரும் வேளையில், ரஷ்யா எரிவாயு குழாயை மூடியுள்ளதால் நிலைமை மேலும் மோசமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## இன்று முதல் நீ ‘பக்கோடா’ என அழைக்கப்படுவாய்




பக்கோடாவால் ஈர்க்கப்பட்ட பிரித்தானிய தம்பதியர் தங்கள் குழந்தைக்கு ‘பக்கோடா’ என பெயர் சூட்டி மகிழ்ந்துள்ளனர்.

நொறுக்குத் தீனியில் முக்கிய இடம் வகிப் பது பக்கோடா. இதை, பிரித்தானியாவில் ‘பக்கோரா’ என அழைக்கின்றனர். அங்குள்ள ஓர் இந்திய உணவகத்தில் விற்கப்படும் இந்த பக்கோடாவால் ஈர்க்கப்பட்ட பிரிட்டன் தம்பதியர், அடிக்கடி அதை வாங்கி சுவைத்துள்ளனர்.

சமீபத்தில், தங்களுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு, ‘பக்கோரா’ எனவும் பெயர் சூட்டி மகிழ்ந்துள்ளனர். பக்கோடா தங்களுக்குப் பிடித்தமான தின்பண்டம் என்பதால், தங்கள் குழந்தைக்கும் அப்பெயரையே சூட்டியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இதையறிந்த அந்த உணவக உரிமையாளர், பக்கோடா என பெயர் சூட்டப்பட்ட குழந்தைக்கும், தம்பதிக்கும் வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார்.

## ‘ஜாலியோ ஜிம்கானா...’



தொப்பி, சன்கிளாஸ் அணிந்து மில்க் ஷேக் குடித்து மகிழும் சிம்பன்சியின் வீடியோ வலைத்தளத்தில் வைரலாகி நெட்டிசன்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

மிருகக்காட்சிசாலையொன்றில் எடுக்கப்பட்ட இந்த வீடியோவில் மனிதர்களைப்போலவே மில்க் ஷேக் குடிக்கும் சிம்பன்சியை பார்த்த நெட்டிசன்கள் இந்த குரங்கைப்போல் கவலையில்லாமல் இருக்க விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

## கனடாவில் தொடர் கத்திக்குத்து: 10 பேர் உயிரிழப்பு; 15 பேர் படுகாயம்




கனடாவின் மத்திய சாஸ்கட்சிவான் மாகாணத்தில் நேற்று 13 இடங்களில் கத்திக்குத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்தச் சம்பவங்களில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன், 15 பேர் படுகாயமடைந்தனர்.

இதுதொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்திற்குரிய 2 பேரை தேடி வருகின்றனர். கனடாவில் அடுத்தடுத்து நிகழ்ந்த கத்திக்குத்து சம்பவங்கள் அந்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே சாஸ்கட்சிவானில் நடந்த தாக்குதல்கள் கொடூரமானவை என்றும் இது இதயத்தை உடைப்பவை என்றும் அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

## சீனாவை உலுக்கிய 6.8 ரிச்டர் நிலநடுக்கம்

சீனாவின் தென்மேற்கு பகுதியில் நேற்று 6.8 ரிச்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சிச்சுவான் மாகாணத் தலைவர் செங்டுவிலிருந்து 180 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள லூடிங் நகரில் பூமிக்கடியில் 16 கிலோ மீற்றர் ஆழத்தில் நேரிட்ட இந்நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோலில் 6.8ஆக பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்துள்ளதுடன், 7 பேர் உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமண தேடல் விளம்பரங்களை
இலவசமாக பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!

“ உங்களுடைய
அன்பான மகன் / மகளின்
திருமணத்துக்கு பொருத்தமான
துணையை தேடுகிறீர்களா?
அவ்வாறாயின் அதற்கான வாய்ப்பை
நாம் உங்களுக்குத் தருகிறோம். ”




தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) 23CM X 10CM அளவுள்ள கடித உறையில் உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

**உங்களுக்கு கிடைக்கும் சகல கடிதங்களையும் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை உங்களுடைய முகவரிக்கு நாம் அனுப்பி வைப்போம்.**

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900, தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

விவாஹா திருமண சேவை
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு.

thamilaneditor@gmail.com

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7